# உதயன்

விலை ரூபா 7.00

கூடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 30 ஞாயிற்றுக்கிழமை (13-04-2003)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:138


# கைதடி சைவச் சிறுவர்கள் இல்லம் நள்ளிரவு பொலீஸாரால் முற்றுகை!

## 22 சிறுமிகள் இரவோடு இரவாக மீட்பு! பணியாளர்கள் மூவர் கைது!

தென்மராட்சி,ஏப்.13

கைதடியில் அமைந்திருக்கும் சைவச் சிறுவர் இல்லம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு பொலீஸாரால் திடீரென முற்றுகையிடப்பட்டது. பாதுகாப்பற்ற முறையில் அங்கு தங்க வைக்கப்பட்டிருந்த 22 பெண் பிள்ளைகளை அங்கிருந்து பொலீஸார் மீட்டனர். அவர்களோடு தங்கியிருந்த ஆண் பொறுப்பாளர் ஒருவர் உட்பட இல்லப் பணியாளர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜீஜீ.விமலசிறி தலைமையில் சென்ற பொலீஸ் குழுவே இந்தத் திடீர் முற்றுகையை நடத்தியது.

குடாநாட்டைச் சேர்ந்த ஆதரவற்ற பல சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்ற இந்த இல்லத்தில் பெண்கள் பிரிவில் தங்கியுள்ள சிறுமிகள் முறைகேடாக நடத்தப்படுகின்றனர் எனக் கிடைத்த தகவல்களை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இது தொடர்பாக விடுதிப் பொறுப்பாளர் வைத்திலிங்கம் தர்மராஜதுரை (வயது 67) மற்றும் விடுதிப் பணியாளர்களான பேரம்பலம் மங்களேஸ்வரி, மகாலிங்கம் மனோன்மணி ஆகியோரை கைது செய்த பொலீஸார் அவர்களைச் சாவகச்சேரி நீதிவான் க.அரியநாயகம் முன் ஆஜர் செய்தனர்.

மூவரையும் எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

விடுதியை நடத்தும் பொறுப்பாளரான இந்து சமயப் பேரவைச் செயலாளரும் கிராம சேவையாளருமான சி.சக்திகிரீவனைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் நீதிவான் உத்தரவிட்டார். சிறுவர் இல்லத்தில் இருந்து மீட்கப்பட்ட - 6 வயதுக்கும் 17 வயதுக்கும் இடைப்பட்ட - 22 சிறுமிகளையும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதித்து சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தி மருத்துவ அறிக்கையை சமர்ப்பிக்கும்படி சாவகச்சேரி நீதிவான் க.அரியநாயகம் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். பின்னர் இவர்களைப் பாதுகாப்பாக இரட்சனசேனை முகாமில் அனுமதிக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள 12 சிறுவர்களையும் விடுதியில் இருந்து அகற்றி இரட்சனசேனை முகாமில் சேர்க்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

### சுபானு வருடப்பிறப்பு

வாக்கிய பஞ்சாங்கப்படி

★ வருடப்பிறப்பு:

நாளை (திங்கட்கிழமை)

முற்பகல் 9.52 மணி

★ விஷு புண்ணிய காலம்:

5.53 மணிமுதல்

நண்பகல் 1.52 மணிவரை

★ கைவிஷேசம்:

*திங்கட்கிழமை*

நண்பகல் 2.22 முதல் 4.10 வரை

காலை 9.12 முதல் 10.23 வரை

*ரதவிகிழமை*

நண்பகல் 2.30 முதல் 4.12 வரை

*வெள்ளி*

பிற்பகல் 4.13 முதல் 8.10 வரை

திருக்கணித பஞ்சாங்கப்படி

வருடப்பிறப்பு:

நாளை (திங்கட்கிழமை)

பிற்பகல் 12.17

விஷு புண்ணிய காலம்:

காலை 8.17 முதல் மாலை 4.17 வரை

கைவிஷேசம்:

மாலை 4.25 மணிமுதல்

மாலை 4.46 மணிவரை

மாலை4.58 மணிமுதல் 5.34 மணிவரை

*(இக்கணிப்புகள் யாவும் பஞ்சாங்க தேரியாகு)*

# ஜப்பான் மாநாட்டில் பங்குபற்றுவதா? மறுபரிசீலனை செய்யப் புலிகள் முடிவு!

## வாஷிங்ரன் முன்ஆயத்தக் கூட்டத்துக்கு அழைக்கப்படாதமை குறித்து சீற்றம்

கிளிநொச்சி,ஏபரல்13

**எதிர்வரும் ஜூன் மாதம் ஜப்பானின் ரோக்கியோ நகரில் நடைபெறும் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தில் தாங்கள் பங்குபற்றுவது குறித்து, மறுபரிசீலனை செய்யப்போவதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.**

**ரோக்கியோ மாநாட்டுக்கான முன் ஆயத்தங்களைச் செய்வதற்காக நாளை அமெரிக்காவின் கொலம்பியா மாநிலத்தில் உள்ள வாஷிங்ரனில் முக்கிய மாநாடு ஒன்று நடைபெறுகின்றது. ஆனால், அந்த மாநாட்டுக்குப் புலிகளுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. இது புலிகளைக் கடுஞ்சீற்றத்துக்கு உள்ளாக்கியிருக்கின்றது.**

புலிகளின் சீற்றத்தை வெளிப்படுத்தும் விதத்தில் புலிகளின் தலைமைப் பீடம், கிளிநொச்சியில் உள்ள தலைமையகத்திலிருந்து நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

"அரசும் புலிகளும் இணைந்து செயற்படவும், சர்வதேச சமூகத்தை அணுகவும், சமாதானப் பேச்சுக்களின் போது உறுதி வழங்கப்பட்டது. ஆனால் அதனை முற்றிலும் மீறும் விதத்தில் - வாஷிங்ரன் மாநாட்டில் புலிகளை ஒதுக்க இலங்கை தலைப்பட்டிருக்கின்றது.

"தமிழர் தேசத்தின் பொருளாதார மற்றும் சமூக நலன்களைப் பாதிக்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

### பெருமளவில் மக்களைத் திரட்டி, ஊர்திகள், பதாகைகள் சகிதம்

# குடாநாட்டில் இம்முறை மேதினத்தை பேரெழுச்சியாக கொண்டாட முடிவு!

## ஏற்பாடுகளில் பொது அமைப்புகள் மும்முரம்

யாழ்ப்பாணம்,ஏப்.13

எதிர்வரும் மே தினத்தை எல்லோரும் இணைந்து ஒரு பெரும் எழுச்சி நிகழ்வாக கொண்டாடுவதென யாழ். மாவட்டத்திலுள்ள பொது அமைப்புக்கள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகள கூட்டாகத் தீர்மானித்திருக்கின்றன.

மேதினம் தொடர்பான முன்னேற்பாடுகளை துரிதகதியில் செய்து முடிப்பதற்கு ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சில தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

மேதினம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

மேதின ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் க.சிவராசா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ் மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் ஞானவேல், ஐக்கிய சோசலிஷ கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.தேவதாசன், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் செ.கனகசபை, தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப்பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம், யாழ்.மாவட்ட அரசியல் துணைப்பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பாக எஸ்கதிர்காமநாதனும் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக இளங்கோவும் ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பாக எஸ்.குகனும், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் சார்பாக அதன் செயலாளர் சிவசுப்பிரமணியமும் யாழ் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் சார்பாக க.நகலிங்கமும் உரையாற்றினர்.

மேதின ஏற்பாடுகள் தொடர்பாக

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஜப்பான் உதவி வழங்கும் மாநாட்டில்

# வடக்கு – கிழக்கு புனரமைப்புக்கு 140 கோடி டொலர் நிதி உதவி

## கோரப்படும் என்கிறார் மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு,ஏப்.13

ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் ஜூன் மாதம் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில வடக்கு - கிழக்கு புனரமைப்புக்கு 140 கோடி டொலர் உதவி கோரப்படும் என்று மத்திய வங்கி ஆளுநர் ஏ.எச்.ஜெயவர்த்தனா தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் 300 கோடி டொலர் பெறுமதியான உதவிகளைப் பெற கோரிக்கையை சமர்ப்பிக்க இருப்பதாகவும் -

அதில் வடக்கு - கிழக்குப் புனரமைப்புக்கு 140 கோடி டொலர் போக, மீதி 160 கோடி டொலர் ஏனைய பிரதேச அபிவிருத்திக்குச் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை வருடாந்தம் பெறும்

(12ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூர் மீனவர் இந்தியர்களை பிடித்தால் சட்டநடவடிக்கை எடுக்க முடியாத நிலை

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.13

இலங்கைக் கடற்பகுதிக்குள் அத்துமீறி ஊடுருவும் இந்திய மீனவர்களை உள்ளூர் மீனவர்கள் பிடித்துவந்தால இந்திய மீனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஏதும் எடுக்கமுடியாது என்று சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

மன்னார் மற்றும் வடமராட்சிக் கடற்பரப்பில் இலங்கைக் கடல் எல்லைப் பகுதிக்குள் ஊடுருவும் மீனவர்களை உள்ளூர் மீனவர்கள் கைது செய்யும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றன.

இவ்வாறு பிடிக்கப்படும் இந்திய மீனவர்கள் மீது எந்தச் சட்ட நடவடிக்கையும் எடுக்கமுடியாத நிலையுள்ளது என்று சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கடலில் கைதாகும் இந்திய மீனவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வசதியாக அவர்கள் கைது செய்யப்படும் இடம் மற்றும் நேரம் தொடர்பான விவரங்களைச் சரியாகப் பதிவு செய்யும் படியும் பொலீஸாருக்கு சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இது விடயமாக விரைவில் வடக்கின் பிரதிப் பொலீஸ்மா அதிபர்களுடன் சட்டமா அதிபர் கலந்துரையாடவிருக்கின்றார்.

(ம-3)

### சீன ட்ரோலர் தாக்கப்பட்ட சம்பவம்

# கண்காணிப்புக் குழு அறிக்கைக்கு அரசும் கடும் ஆட்சேபம் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.13

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீன ட்ரோலர் ஒன்று தாக்கப்பட்ட சம்பவத்தில் மூன்றாவது ஆயுத சக்தி ஒன்று சம்பந்தப்பட்டதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்ததை அரசு ஆட்சேபித்துள்ளது.

அரசின் சமாதானச் செயலணிப் பணிப்பாளர் நாயகம் பேர்னாட் குணதிலக இந்த ஆட்சேபத்தை நேரடியாக கண்காணிப்புக் குழுத் தலைவரிடம்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பிறக்கும் புத்தாண்டு நாட்டில் சமாதானம் நிலைக்க வழிவகுக்கும்

## அமைச்சர் மகேஸ்வரன் செய்தி

யாழ்ப்பாணம்,ஏப்.13

சித்திரைப் புத்தாண்டு இலங்கை வாழ் மக்களுக்கு சுபீட்சத்தை வழங்கி நாட்டில் சமாதானம் நிலைக்க வழி வகுக்கும் என்று இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் தனது புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உதிக்கும் புத்தாண்டில் மே மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் 2 ஆவது உலக இந்து மாநாடு வெகுசிறப்பாக நடத்தப்படவிருக்கின்றது. கொழும்பில் மாத்திரம் அன்று இந்துக்கள் வாழும் எல்லாப் பிரதேசங்களிலும் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இம்மாநாடு கோலாகலமாக நடப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சீரழிந்து போயுள்ள எமது ஆலயங்களை புனரமைப்பதுடன் நலிவுற்ற எமது கலை, கலாசாரத்தையும் புத்துயிர் பெறச் செய்வதற்கு இம்மாநாடு வழிவகுக்கும் என்பது எனது உறுதியான நம்பிக்கை. இம்மாநாடு வரலாற்று சிறப்பு மிக்கதாக அமைய உங்கள் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றேன் - என்றுள்ளது.

### செல்வம் செய்தி

ரெலோ அமைப்பின் தலைவர் அ.அடைக்கலநாதன் தனது புத்தாண்டுச் செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ் மண்ணில் போர் முழக்கங்கள் ஓய்ந்து அமைதிச் சூழல் ஏற்பட்டு இரண்டாம் ஆண்டு தொடங்குகிறது. கைவிடப்பட்ட விளைநிலங்கள் விவசாயிகளின் கால்பட்டதும். அமோக விளைச்சலை அள்ளித்தந்து அவர்களை அக்களிப்பில் ஆழ்த்திய வருடமிது. நமது மீனவர்களும் இரவு நேர மீன்பிடிக்குத் தடங்கலின்றி செல்வதற்கு வழிவகுத்த ஆண்டாக இச்சுபானு ஆண்டு மலர்கின்றது.

மலரும் புத்தாண்டு இனங்களுக்குள் ஏற்பட்ட பகைமை உணர்வை அறவே அழிக்கும் ஆண்டாகவும் பழிக்கு பழிவாங்கும் குரோத உணர்வுகள் கொண்டவர்கள் மனம் மாறவும் பகைமையை மூட்டிப் பசி ஆறுபவர்களை மக்கள் இனம் காணவும் வழி சமைக்கும் ஆண்டாகவும் அமைய வேண்டுமென விரும்புகிறேன்.

20 வருடங்கள் போர்ச் சூழலினால் அழிவுற்று அல்லல் பட்ட தமிழ் பேசும் இனம் மேற்கொண்ட அமைதி வாழ்வு நீடித்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அகதிகளாக வாழ்ந்திருப்போர் சுதந்திர புருஷர்களாய்த் தமது சொந்த மண்ணில் கால்வைக்கவும், நம் இளைஞர்கள் கல்வி, வேலைவாய்ப்புக்களில முன்னேற்றமடைய வேண்டுமென்றும் ஆசிக்கிறேன். குடி, போதைவஸ்துக்களின் பிடியில் நம் இளைஞர்கள் சிக்கிவிடாமல் பெற்றோரும், பெரியோரும் அவர்கள் மேல் கூடுதலான அக்கறை காட்ட வேண்டுமென்றும் விரும்புகின்றேன். - என்றுள்ளது. (ம-3)

# வலிகாமம் தெற்கு விவசாயிகள் திராட்சை செய்கையில் ஆர்வம்

வலி.தெற்கு,ஏப்.13

வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில திராட்சைச் செய்கையில் விவசாயிகள் மீண்டும் ஆர்வம் காட்டத்தொடங்கியுள்ளனர்.

முன்னைய காலங்களில் நல்ல விளைச்சலைத் தந்த திராட்சை செய்கை, யுத்த நடவடிக்கைகளால் விவசாயிகளால் கைவிடப்பட்டிருந்தது.

தற்போது விவசாயிகள் மீண்டும் திராட்சைச் செய்கையில் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர். புன்னாலைக்கட்டுவன், ஊரெழு, உரும்பிராய் போன்ற இடங்களில் கைவிடப்பட்டிருந்த தோட்ட நிலங்கள் பலவும் புனரமைப்புச் செய்யப்பட்டு திராட்சைக் கன்றுகள் விவசாயிகளால் நடப்பட்டு வருகின்றன.

அத்துடன், தரிசு நிலங்களாக கிடந்த பல காணிகள் பண்படுத்தப்பட்டு வெங்காயம், வாழை போன்றன பயிரிடப்பட்டும் வருகின்றன. விவசாயிகளால் இவ்வருடம் செய்கைபண்ணப்பட்ட புகையிலைக் கன்றுகள் நல்ல விளைச்சல் கண்டுள்ளமையும குறிப்பிடத்தக்கது. (எ-152)

### கோடா வைத்திருந்த சிறுவனுக்கு ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம்,ஏப்.13

கசிப்புத் தயாரிக்கும கோடாவை வைத்திருந்த குற்றச்சாட்டின்பேரில் சிறுவன் ஒருவனுக்கு யாழ்.நீதிமன்றினால் இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.எம்ரான்லி வீதியைச் சேர்ந்த றொபேட் நிக்ஸன் (வயது17) என்ற சிறுவனுக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ம-10)

# சமய சந்நிதிகளில்

மானிப்பாய்,ஏப்.13

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின வருடாந்த உற்சவத்தில நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு இரதோற்சவம் இடம்பெற வுள்ளது.

இன்று மாலை 6.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம் பெறவுள்ளன.

(ம-90)

★ ★ ★

கோப்பாய்,ஏப்.13

நீர்வேலி கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தில் தேர் உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் தீர்த்த உற்சவம் மறுநாள் புதன்கிழமையும் இடம்பெறும்.

(ம-69-72)

★ ★ ★

கோப்பாய்,ஏப்.13

திருநெல்வேலி கிழக்கு வெள்ளைப் பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ பூர்த்தி விழா எதிர்வரும் சித்திரைப் பூரணை தினமான புதன் கிழமை இடம்பெறவுள்ளது.

விநாயகப் பெருமான் தெரு வீதி உலா, கிராம வலம் என்பன அன்று பிற்பகல் இடம்பெறும்.

(ம-72)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.13

மூளாய், வதிரன்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து தேர்த்திருவிழா நடைபெறும். மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும்.

(ம-3)

★ ★ ★

கோண்டாவில்,ஏப்.13

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா, புத்தாண்டு தினமான நாளை திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது. கடந்த ஆண்டு உருவாக்கம் பெற்ற சித்திரதேர் தரிப்பிடம் இவ்வாண்டு இரதோற்சவ தினத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது. செவ்வாய்க்கிழமை காலை தீர்த்தோற்சவமும் புதன்கிழமை மாலை முருகப்பெருமான் திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும்.

(ம-85)

★ ★ ★

கோண்டாவில்,ஏப்.13

தாவடி தெற்கு ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறும். மறுநாள் புதன்கிழமை காலை சித்திரா பௌர்ணமி தின தீர்த்தோற்சவம் மகேஸ்வர பூஜையுடன் இடம்பெறும்.

(ம-85)

### நயினாதீவில் படகு ஒதுங்கியது

யாழ்ப்பாணம்,ஏப்.13

நயினாதீவுக்கடற்கரைப் பகுதியில் நேற்றுக் காலை 6 மணிக்கு பிளாஸ்டிக் படகு ஒன்றும் 15 குதிரைவலு கொண்ட மோட்டார் ஒன்றும் கரை ஒதுங்கியுள்ளன.

இந்தப் படகை தவறவிட்டவர்கள் நயினாதீவு 8ஆம் வட்டாரத்தில் உள்ள நிஸார் என்பவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-3)

### தந்திரதேவ மகராஜ யாழ். விஜயம்

யாழ்ப்பாணம்,ஏப்.13

சுவாமி ஸ்ரீமத தந்திரதேவ மகராஜ நாளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்கள் தங்கியிருக்கும் சுவாமிகள் பல ஆலயங்களுக்குச் சென்று பஜனை, சொற்பொழிவுகள் ஆகியவற்றை நடத்துவார்.

பசு பாதுகாப்பு பிரசாரம் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுகள் ஆகிய வற்றிலும் பங்கு பற்றுவார்.

(-3)

# பக்தாத்தில் இரவுநேர ஊரடங்கு பிறப்பிப்பது தொடர்பாக ஆராய்வு

## அமெரிக்க இராணுவம் நடவடிக்கை

பக்தாத்,ஏப்.13

ஈராக் தலைநகர் பக்தாத் அமெரிக்கப் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததையடுத்து அங்கு தொடர்ந்து வரும் சட்டம் மற்றும் ஒழுங்கு மீறல்களையும் சூறையாடல்களையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக அங்கு இரவு நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பது குறித்து அமெரிக்கா ஆராய்ந்து வருகின்றது.

பக்தாத்தில் கடந்த நான்கு நாள்களாக அரச அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் மருத்துவமனைகள் என்பவற்றிலும் பணக்காரர்களின் வீடுகளிலும் மக்கள் புகுந்து பொருள்களைச சூறையாடி வருகின்றனர். இதனால் ஈராக்கிய தலைநகர் ஒரு பாதுகாப்பற்ற நிலைக்குள் சிக்கிக் கொண்டுள்ளது.

அங்கு நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினர் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளிலேயே அதிக கவனம் செலுத்துகின்றனர். இதனால் சூறையாடல் சம்பவங்கள் பற்றி அவர்கள் அதிக கவனம் செலுத்துவதில்லை. இது குறித்து ஐ.நா. உட்பட பல தொண்டர் அமைப்புக்கள் அமெரிக்காவை கடுமையாக கண்டித்துள்ளன.

பக்தாத்தின் சில இடங்களில் இத்தகைய சூறையாடல் கும்பல்களிடம் இருந்து தப்புவதற்காக பொது மக்களே பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். வீடுகளுக்கு முன்பாக முள்ளுக்கம்பி வேலிகள் அடிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பல பொதுமக்கள் துப்பாக்கிகளுடன் வீதிகளுக்கு வந்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வீதிகளிலும் ஆயுதங்கள் சகிதம் அவர்கள் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்பகுதியில் வரும் வாகனங்களை இடைமறித்து அவற்றில் சூறையாடப்பட்ட பொருள்கள் ஏதாவது இருக்கின்றதா என்றும் அவர்கள் சோதனையிட்டு வருகின்றனர்.

மருத்துவமனை ஒன்றும் சூறையாடப்பட்டதால், இப்போது அங்கும் ஊழியர்கள் ஆயுதங்களுடன் காவல் இருக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில், நிலைமையைக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக பக்தாத்தில் இரவுநேர ஊரடங்கைப் பிறப்பிப்பது குறித்து அமெரிக்க இராணுவம் ஆராய்ந்து வருகின்றது.

எனினும், கட்டாரில் உள்ள அமெரிக்கப் படைகளின் தலைமையகம் பக்தாத்தில் இரவு நேர ஊரடங்கு பிறப்பிக்கப்படும் என்ற செய்தியை உறுதிப்படுத்தவில்லை.

"நாம் சூறையாடல்களை நிறுத்துவது எப்படி என்பது குறித்து சிந்தித்து வருகின்றோம்" - என்றார் பக்தாத்தில் நிலைகொண்டுள்ள அமெரிக்க மரைன் படைப்பிரிவின் முதலாவது டாங்கிப் படையணியின் கட்டளை அதிகாரி லெப்டினன்ட் கேணல் ஜிம் ஷொட்டிர். (ம)

### பக்தாத் மியூசியத்தில் கொள்ளை

பக்தாத்,ஏப்.13

ஈராக் நாட்டின் பக்தாத் நகரததிலுள்ள மியூசியம் ஒன்றை அந்த ஊர் மக்கள் கொள்ளையடித்துச் சென்றனர். இந்த மியூசியத்தில் 1000 வருடத்திற்கு முன்னைய மெசபடோமியா நாகரிகத்தைச் சேர்ந்த அரிய பொருள்கள் இருந்தன. இந்த கொள்ளைச் சம்பவம் நடந்தபோது அமெரிக்க இராணுவத்தினர் தடுக்கவில்லை என ஊர்ப் பிரமுகர்கள் கூறினர்.

9 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மொசப்பதேமியன் நாகரிகத்தின சின்னங்கள் மற்றும் சான்றாதாரங்கள போன்ற மிகமிகப் பெறுமதியான பொருள்கள் இந்த மியூசியத்தில் வைக்கப்பட்டிருந்தன. அவை ஒன்றில சூறையாடப்பட்டன அல்லது சேதமாக்கப்பட்டன. அது தவிர ஒரு லட்சத்து 70 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்பொருள்களும் மியூசியத்திலிருந்து அழிக்கப்பட்டுள்ளன. (ம)

# ஈராக்கில் விரைவில் இடைக்கால அரசு

## அமெரிக்க விசேட தூதர் தெரிவிப்பு

காபூல்,ஏப்.13

ஈராக்கில் அடுத்தவாரம் நடைபெறவுள்ள பூர்வாங்கக் கூட்டத்தைத் தொடர்ந்து அங்கு விரைவில் இடைக்கால அரசு அமைக்கப்படும் என்று அமெரிக்கா சனிக்கிழமை தெரிவித்தது.

ஆப்கான் மற்றும் ஈராக்கிற்கான அமெரிக்க அதிபரின் விசேட தூதர் ஜல்மாய் கலீல் ஸாத் இத்தகவலைக காபூலில் தெரிவித்தார்.

ஆப்கானில் தலிபான் அரசு கவிழ்ந்ததும் இடைக்கால அரசு எவ்வளவு விரைவில் அமைக்கப்பட்டதோ, அதே வேகத்தில் ஈராக்கிலும் அமைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈராக்கியர்களை மட்டுமே கொண்டதாக இடைக்கால அரசு இருக்கும். காபூலில் தலிபான் அரசு கவிழ்க்கப்பட்ட ஒரு மாதத்தில் இடைக்கால அரசு ஏற்படுத்தப்பட்டதை நினைவுபடுத்த விரும்புகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈராக்கில் சதாம் ஆட்சியை அகற்றுவதைவிட, அங்கு சர்வாதிகாரம் மற்றும் பேரழிவு ஆயுதங்களை ஒழிப்பது தான் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப்படைகள் நடத்திய போரின முக்கிய குறிக்கோளாகும் என்றார் அவர்.

ஈராக்கில் ஆட்சி நடத்த வேண்டும என்று அமெரிக்கா ஒருபோதும் விரும்பவில்லை என்றும் அமெரிக்க அதிபரின் விசேட தூதர் குறிப்பிட்டார். (ம)

# ஈராக் மறுசீரமைப்பில் ஐ.நாவுக்கே முக்கிய பங்கு

## பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா வலியுறுத்தல்

ஈராக் மறுசீரமைப்பில் ஐ.நாவுக்கு முக்கிய பங்கு அளிக்கவேண்டும் என்பதில் ரஷயா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய 3 நாடுகளும் தொடர்ந்து பிடிவாதமான போக்கையே கடைப்பிடித்து வருகின்றன.

உலக அரங்கில்

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களை ஒழிக்கவேண்டும் என்ற இலட்சியத்தை அடைவதில் அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் தவறிவிட்டன என்றும், அந்த நாடுகள் கடுமையாகக் குற்றஞ்சாட்டின.

ரஷ்யாவில் மன்னர் ஆட்சி காலத்தில் தலைநகராக விளங்கிய செயின்ட் பீட்டர்ஸ் பேர்க்கில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், ஜேர்மன் அதிபர் ஸ்குரோடர், பிரான்ஸ் அதிபர் ஜக்ஸ்ஷிராக் ஆகியோர் கூட்டாக பேட்டியளித்தனர்.

மறுசீரமைப்புப் பணிகளை முன்னின்று நடத்துவதற்கு ஐ.நாவிற்கே நியாயமான உரிமையுண்டு என்பதால ஈராக்கில் அதற்கே முக்கிய பங்கு அளிக்கவேண்டும் மேலும், கம்போடியா, கிதிமோர், கொசோவா மற்றும் ஆப்கானிஸ்தானில் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொண்டதன் மூலம் ஐ.நாவிற்கு கணிசமான அனுபவம் உண்டு என்றும் அந்தத் தலைவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

# வளைகுடாப் பகுதியில் படைகள் குறைப்பு

## இங்கிலாந்து நடவடிக்கை

லண்டன்,ஏப்.13

அமெரிக்காவுடன் சேர்ந்து ஈராக் மீது போர் தொடுப்பதற்காக வளைகுடாப் பகுதிக்கு பிரிட்டிஷ் இராணுவம் தனது படைகளை அனுப்பி வைத்தது. போர்க்கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல், போர் விமானங்கள், ஹெலிகள் அங்கு குவிக்கப்பட்டன.

தற்போது கிட்டத்தட்டப் போர் முடிவுக்கு வந்துவிட்டதால் வளைகுடாப் பகுதியில் உள்ள தனது படைகளை குறைக்க பிரிட்டன் முடிவு செய்துள்ளது. படைக்குறைப்பு நடவடிக்கை தொடங்கிவிட்டதாக பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ம)

# அதிபர் சதாம் இறந்திருக்கலாம் என்கிறது அமெ.புலனாய்வுத்துறை

போரில் ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் இறந்திருக்கலாம் என்று புதிய தகவல்கள் கிடைத்துள்ளதாக அமெரிக்க புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

இருந்தபோதும், சதாம் உயிருடன் இருக்கிறாரா அல்லது இறந்துவிட்டாரா என்பதற்கான போதிய ஆதாரங்கள் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டன.

ஈராக் அதிகாரிகள் நடத்திய பேச்சுகளை கண்காணித்தபோது அவர் இறந்திருக்கலாம் என்று நம்பவேண்டியுள்ளது என்று அமெரிக்க அதிகாரிகளைச் சுட்டிக்காட்டி சி.என்.என். செய்தி ஒளிபரப்பியது.

பேச்சு நடத்திய ஈராக்கிய அதிகாரிகள் மிக உயர் நிலையில் உள்ளவர்கள் அல்ல என்பதையும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (ம)



சக்தி எவ்.எம் நடத்தும் சித்திரைப் புத்தாண்டு விழாவை ஒட்டி நேற்று நடத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டியின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

## சக்தி எவ்.எம். ஆதரவில்

# சித்திரை புத்தாண்டு விழா இன்று யாழ். மத்திய கல்லூரியில்

யாழ்ப்பாணம்,ஏப்.13

சித்திரைப் புத்தாண்டை ஒட்டி சக்தி எவ்.எம். நடத்தும் சித்திரை விழாவில் இன்று சைக்கிள் ஓட்டப் போட்டி, பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இன்று காலை 6.30 மணிக்கு 60 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப் போட்டி யாழ்நூலகம் முன்பாக இருந்து ஆரம்பமாகும். அதன் பின் நண்பகல் ஒரு மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும்.

இந்த விழாவின் ஓர் அங்கமாக நேற்று 20 கிலோமீற்றர் மரதன் ஓட்டப் போட்டி இடம்பெற்றது.

பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்ட இந்தப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

முதலாம் இடம் - த.ஜெயந்தன் அளவெட்டி வடக்கு, 2ஆம் இடம் - பி.அன்ரன் ஸ்ரீபன் (இளவாலை), 3ஆம் இடம் - க.ஜதீஸ்வரன் (நயினாதீவு), 4ஆம் இடம் - ந.காந்தரூபன், (பண்டத்தரிப்பு),5ஆம் இடம் அ.சுரேஸ் (தாவடி), 6ஆம் இடம் - சி.புஸ்பகாந்தன் (கைதடி), 7ஆம் இடம் - சி.சிவலோகன் (பண்டத்தரிப்பு), 8ஆம் இடம் - ப.ஜெயானந்தன் (வட்டுக்கோட்டை), 9ஆம் இடம் - ந.ரவி:க்குமார் (கோண்டாவில்), 10 ஆம் இடம் - சு.பிரகாஷ் (பண்டத்தரிப்பு).

(-3-86)

# அறிக்கைகள், குற்றப்பத்திரங்கள் தமிழ்மொழியிலேயே தாக்கலாகும்

## நீதிவான்கள் - பொலீஸார் கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம்,ஏப்.11

யாழ்.மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் அறிக்கைகள் மற்றும் குற்றப்பத்திரங்கள் இனி தமிழ்மொழியிலேயே பொலீஸாரால் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன.

யாழ்.நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நீதிவான்கள் - பொலீஸ் அதிகாரிகள் சந்திப்பில் இதுதொடர்பாக முடிவு எடுக்கப்பட்டது.

யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா தலைமையில் நடந்த இந்தச் சந்திப்பில், நீதிமன்றங்களில் தமிழில் வழக்குகளை நடத்துவது தொடர்வாக விரிவாக ஆராயப்பட்டது.

தற்சமயம் வழக்குத் தாக்கல் செய்வதற்கு முன்பாக சமர்ப்பிக்கும் 'பி' அறிக்கைகள், குற்றப்பத்திரங்கள், சாட்சியங்களின் வாக்குமூலங்கள் யாவும் தனிச் சிங்களத்திலேயே சமர்ப்பிக்கப்படுகின்றன.

இதன் காரணமாக வழக்கின் உண்மைத்தன்மை குறித்துச் சந்தேகம் எழ நேரிடுகிறது. அத்துடன், வழக்காளி மற்றும் எதிராளிக்கு வழக்கின் முழு விவரங்களும் தெரியத்தக்க வகையில் அவர்களுக்கு தெரிந்த மொழியில் வழக்கு ஆவணங்கள் அமைவதுதான் நல்லது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

குடாநாட்டில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகளைத் தமிழில் பதிவுசெய்ய ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலீஸ் தரப்பினர் தெரிவித்தனர். இந்த நடைமுறை ஏற்கனவே அமுலில் உள்ளதாகவும் அவர்கள் அங்கு தெரிவித்தனர்.

குடாநாட்டில் உள்ள நீதிமன்றங்களில் பொலீஸாரால் தாக்கல் செய்யப்படும் அறிக்கைகள், குற்றப்பத்திரம் தமிழ்மொழியில் சமர்ப்பிக்க ஏதுவாக ஒவ்வொரு பொலீஸ் நிலையங்களிலும் தமிழ்பேசும், எழுதும் பொலீஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் பொலீஸ் தரப்பினரால தெரிவிக்கப்பட்டது.

வழக்குகள் தொடர்பான சகல ஆவணங்களையும் தமிழில் சமர்ப்பிப்பது என்றும் -

இந்த நடைமுறையை உடன் அமுலுக்கு கொண்டுவருவது என்றும் - தீர்மானிக்கப்பட்டது.

(ஐ-3-5-10)

ASIAN COMPUTER EDUCATION
தரமான கணனிப் பாடநெறிகள்
2G,ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

MICRO PC SYSTEMS
◆ கணனி விற்பனை ◆ பழுதுபார்த்தல் ◆ பராமரிப்பு
intel IBM hp Mercury PROLINK
175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பெ. 077-7308417
MPAQ COMPUTERS

ரூ. 16910 முதல்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
சிங்கர்
புதிய பார்வை
இல.1, ஸ்டான்லி விதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 021-2225408

# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம் – 2003

# பரிசளிப்பு வைபவம்

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை ஒட்டி உதயன் நடத்திய போட்டிகளில் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலிகளுக்கான பரிசளிப்பு வைபவம்.

**காலம் :-** நாளை (14.04.2003) புத்தாண்டு தினம்

**நேரம் :-** பிற்பகல் 4.00 மணி.

**இடம் :-** உதயன் - சஞ்சீவி பணிமனை.

பரிசுக்குரியவர்கள் நிகழ்ச்சி ஆரம்பமாகும் நேரத்துக்கு அரை மணி நேரம் முன்பாக அலுவலகத்தில் சமுகமளிக்கவும்.

## இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

SHARP
உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை
89, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2225150
Browns ELECTRONICS

எக்ஸ்போ ஏவியேஷனில் கொழும்புக்கு பயணியுங்கள்
இலவச போக்குவரத்து வசதி
எக்ஸ்போ ஏவியேஷன் (பிரைவட்) லிமிட்டட்
14, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021-2223891, 071-349999
296,A/1, காலி வீதி, கொழும்பு 6
தொ.பேசி: 01-360290,360291,074-512666

என்றென்றும் தரம் அது நிரந்தரம்
10 YEARS WARRANTY
உங்களின் மனதில் என்றுமே முதல்வன்!
Lumala



'பரிபூரண'
Nestlé
NESTOMALT
சுவையை அறிந்துகொள்ளுங்கள்!
Nestlé
NESTOMALT
Malted Food Drink
ரூ 10/-
சிறிய பெக்கட் ஒன்றை வாங்குங்கள்
சுவையின் நிரூபணம்!

உதயன்

# செயற்படுத்தப்படவேண்டிய முக்கிய ஆலோசனை

“பொலீஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவு பேணப்படவேண்டும் என்பது உண்மைதான். ஆனால், அதற்காகக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோருடனும் பொலீஸார் நல்லுறவைப் பேண வேண்டும் என்பதில்லை. சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் பொதுமக்களுடன் மட்டுமே பொலீஸார் நல்லுறவைப் பேணவேண்டும்.”

- இவ்வாறு யாழ். பொலீஸாருக்கு அறிவுரை கூறியிருக்கிறார் யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா.

குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கத் தவறும் பொலீஸாரை இலங்கை ஜனநாயக அரசியல் முறைமைகளுக்கு முரணாகச் செயற்படுபவர்கள் என்றே கருதவேண்டும் எனவும் யாழ்.நீதிவான் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இம்மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பொலீஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜாவும், பொதுமக்களுக்கும் பொலீஸாருக்கும் இடையிலான நல்லுறவைப் பேணுவதன் அவசியத்தை இங்கு வலியுறுத்தியிருந்தார். பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் பொலீஸாரின் செயற்பாடுகள் வெற்றியளிக்கா என்று சுட்டிக்காட்டிய அவர், பொலீஸார் - பொதுமக்கள் நல்லுறவைப் பேண சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாவும் உறுதியளித்தார்.

பொதுமக்கள் - பொலீஸார் நல்லுறவு வலியுறுத்தப்படும் இவ்வேளையில், சர்வதேச அமைப்பு ஒன்று இலங்கையில் தனது உள்நாட்டுப் பிரதிநிதிகள் மூலம் மேற்கொண்ட ஆய்வு ஒன்றின் முடிவு வெளியிட்டிருக்கும் திடுக்கிடும் தகவலை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகின்றது.

‘ட்ரான்பரன்ஸி இன்ரநாஷனல் (Transparency International) என்ற இந்த அமைப்பு நாட்டில் உள்ள அரச திணைக்களங்களின் செயற்பாடுகள் பற்றியே ஆய்வு நடத்தியது.

இலங்கையில் அதிக ஊழல், லஞ்சம் தலைவிரித்தாடும் திணைக்களமாக விளங்குவது பொலீஸ்தான் என்ற அதிர்ச்சித் தகவலையே அந்த ஆய்வு அறிக்கை வெளிப்படுத்தியது.

அந்தச் சூழ்நிலை நிலவுவதை நன்கு உணர்ந்திருப்பதால்தான், குற்றச்செயல்களைப் புரிவோரோடு நல்லுறவைப் பேணாமல் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் பொதுமக்களுடன் நல்லுறவை வளருங்கள் என்று யாழ்.நீதிவான் பொலீஸாருக்கு அறிவுறுத்தலுடன் கூடிய ஆலோசனை வழங்கியிருக்கின்றார் என்று கருதவேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழர் பிரதேசங்களிலும் இப்போதுதான் வழமை நிலை மெல்ல மெல்லத் திரும்பிக்கொண்டிருக்கின்றது. அதேசமயம், இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இப்பிரதேசங்களில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வழமைநிலை திரும்புவதற்கு, சட்டமும், ஒழுங்கும் சமூகத்தில் நிலைநாட்டப்படுவது அவசியம். இந்த வகையில், வழமை நிலையை ஏற்படுத்தும் விவகாரத்தில் பொலீஸாரின் பங்கு, பணி முக்கியத்துவம் பெறுகின்றது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைப் பொறுத்தவரை இது விடயத்தில் நிலைமை எவ்வளவோ மேல் என்பதையும், தமிழீழக் காவல்துறை தனது பணியை மெச்சத்தக்க வகையில் ஆற்றி வருகிறது என்பதையும் இங்கு குறிப்பிட்டாகவேண்டும். இந்த முன்மாதிரி ஏனைய பிரதேசங்களுக்கும் வழிகாட்டியாகக் கொள்ளப்பட்டு விஸ்தரிக்கப்படவேண்டும்.

1970களின் பிற்பகுதியில் ஈழத் தமிழர்களின் உரிமைப் போர் அஹிம்சை வழியிலிருந்து ஆயுத வழிக்குத் திசை திரும்பியது. அந்தக் கால கட்டத்தில் எமது இனத்திற்கெதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட அராஜக அடக்குமுறை, அந்த திசை திரும்பலுக்கு அடிப்படைக்காரணமாயிற்று. அதில் அப்போதைய பொலீஸாரின் பங்களிப்பும் கணிசமானது என்பதை முந்திய தலைமுறை மறந்திருக்காது.

கடந்தகாலக் கசப்புணர்வுகளை மறந்து, புதிய யுகம் படைக்க முயலும் இந்தக் காலகட்டத்தில் முன்னைய கசப்புணர்வுப் பாடங்களை நல்ல அனுபவமாகக் கொண்டு செயற்படுவது நமக்கும் சமூகத்துக்கும் நன்மை தரும்.

இந்த வகையில் யாழ்.நீதிவானின் அறிவுரையை தக்க பாடமாகக் கொண்டு சுமுகநிலையை ஏற்படுத்தும் நற்பணியில் தமது பங்களிப்பை நியாயத்துடன் ஆற்ற பொலீஸார் முன்வரவேண்டும்.

# நண்பியாக நாடகமாடி வீட்டில் புகுந்து தாலிக்கொடி அபகரிப்பு

## உடனடி நடவடிக்கையால் மீட்பு

காரைநகர்,ஏப்.13

பட்டப்பகலில் வீட்டினுள் புகுந்த இளம் யுவதி ஒருவர் அவ் வீட்டில் உளளோரை நலன் விசாரிப்பதாக பாவனை செய்து வீட்டில் இருந்த தாலிக்கொடியினை அபகரித்துச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாயன்று பகல் 11 மணியளவில் காரைநகர் சின்னாலடிப் பகுதியில் உள்ள செல்லையா பாக்கியம் என்பவரது வீட்டில் இடம்பெற்றது.

இதுதொடர்பாக வீட்டு உரிமையாளர் அப்பகுதி கிராம சேவையாளரிடம் உடன் முறையிட்டதைத் தொடர்ந்து, கிராமசேவையாளரும் அப்பகுதி பொதுமக்களும் காரைநகர் பகுதியில் தேடுதல் நடத்தி சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய யுவதி ஒருவரைப் பிடித்து கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் யுவதியை விசாரணை செய்தபோது திருட்டினை ஒப்புக்கொண்ட யுவதி, திருடிய தாலிக் கொடியினை சம்பந்தப்பட்டவர்களிடம் மீள ஒப்படைத்தார். (ம-73)

## நாட்டு நடப்பு

### இதுவன்றோ குடும்ப வாழ்வு!

மதியம் மதுபோதை ஏற
  மனைவியைத் தூற்றி நிற்பான்
அதிகம் உணவு கேட்டு
  அடி உதை அவன் தருவான்
பதியவள் கண்ணீர் மல்க
  பக்குவமாய் உணவு நல்க
மதி கெடுத்த வெறி முறிய
  மனைவியை அணைத்துக்கொள்வான்
புதுமண தம்பதியர் போல
  பூரித்து குடிசை உள்ளே
அதி உயர் இன்பம் மேவ
  அன்றைய பொழுதும் போகும்
இதில் ஒரு புதுமை கண்டேன்
  இதுவன்றோ குடும்ப வாழ்வு.

- விகடகவி.

# யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கி பிராந்திய வங்கியாக தரமுயர்வு

## இந்த ஆண்டு இறுதிக்குள் மேலும் வசதிகள் கிடைக்கும் என்கிறார் டாக்டர் சிவசங்கர்

யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கி நவீன வசதிகளைக் கொண்ட பிராந்திய இரத்த வங்கியாக மாற்றி அமைக்கப்படவுள்ளது. இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி டாக்டர் இ.சிவசங்கர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

தேசிய இரத்தமாற்றுப் பிரயோகசபை இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. இந்த வருட இறுதிக்குள் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி, பிராந்திய இரத்த வங்கியாக உயர்த்தப்பட்டுவிடும் என்றார் டாக்டர் சிவசங்கர்.

மந்திகை, கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மருத்துவமனை இரத்த வங்கிகளுக்குத் தேவையான இரத்தத்தை வழங்குதல் -

இந்த வங்கிகளில் இருந்து கிடைக்கும் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தி பெறுபேறுகள் பற்றி உடனடியாக அந்தந்த வைத்தியசாலைகளுக்கு பக்ஸ் மூலம் அறிவித்தல் - போன்ற பணிகளிலும் இரத்த வங்கி ஈடுபடும் என்றும் அவர் சொன்னார். (ம-180)

## வேலம்பிராய், தச்சன்தோப்பு பகுதிகளில்

# சட்டவிரோதமாக மணல் ஏற்றியோர் விடுதலைப் புலிகளிடம் சிக்கினர்!

இரவுவேளையில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றியவர்கள் விடுதலைப் புலிகளிடம் அகப்பட்டு பின்னர் எச்சரிக்கையின் பின் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை நாவற்குழிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

வேலம்பிராய், தச்சன்தோப்பு மற்றும் நாவற்குழி ஆகிய பகுதிகளில் கடந்த பல மாதங்களாக சட்டவிரோதமான முறையில் மணல் அகழப்பட்டுவந்தது. இதனால், கடல்நீர் மக்கள் குடியிருப்புக்களினுள் உட்புகும் அபாயம் ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் அப்பகுதி மக்கள் இதுகுறித்து விடுதலைப் புலிகளிடம் முறைப்பாடு செய்தனர். இதனையடுத்து சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றும் பணியில் ஈடுபட்ட பலர் கடந்த வியாழக்கிழமை புலிகளிடம் வசமாக மாட்டிக்கொண்டனர்.

கடுமையான எச்சரிக்கையின் பின்னரே இவர்கள் விடுவிக்கப்பட்டனர் எனக் கூறப்பட்டது. (எ-75)

## ஜீ.சீ.ஈ. மாணவர்களுக்கு

# பெறுபேற்று அட்டவணையுடன் சான்றிதழ்களும் கிடைத்தன

## முதற்றடவையாகத் தோற்றியவர்களுக்கு

வலிகாமம் தெற்கு,ஏப்.13

கடந்த வருடம் நடைபெற்ற ஜீ.சீ.ஈ. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுடைய பெறுபேற்று அட்டவணைகளுடன் அவர்களுக்குரிய பெறுபேற்றுச் சான்றிதழ்களும் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பரீட்சைக்கு முதன்முறையாகத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கே பெறுபேற்று சான்றிதழ்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைக்கான பெறுபேறுகள் அட்டவணையிலும், பெறு பேற்று சான்றிதழ்களிலும் பாடசாலை மட்ட கணிப்பீட்டுத் திட்டத்தின் கீழ் முதன்முறையாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவரது தேர்ச்சியை உள்ளடக்கிய விவரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கு, வழங்கப்படவுள்ள பெறுபேற்று சான்றிதழ்களின் பிரதிகள் எச்சந்தர்ப்பத்திலும் பரீட்சைத் திணைக்களத்தினால் திரும்பவும் வழங்கப்படமாட்டாதெனவும் -

பெறுபேற்று அட்டவணைச் சான்றிதழில் திருத்தங்கள் ஏதும் செய்ய வேண்டி இருப்பின், அதுபற்றி மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன் பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றும்-

பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.(எ-152)

### நாளை

சித்திரை 01
திங்கட்கிழமை
(14.04.2003)
திதி : துவாதசி
முற்பகல் 8.29 வரை.
நட்சத்திரம்: பூரம்
பிற்பகல்: 1.08 வரை.
பிரதோச விரதம்
சுபானு வருஷப்பிறப்பு
சுபநேரம் : 12.05 - 1.35
ராகுகாலம் : 7.35 - 9.05
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

செல்வத்தின் ரகசியம் சேமிப்பு என்னும் சொல்லிலே தான் பொதிந்திருக்கிறது.

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

# வலுவிழந்தவர்களுக்கு கருவிகள் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.13

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வலுவிழந்தவர்களுக்கு செவிப்புலன் கருவிகள், முச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

வலுவிழந்தவர்கள் தமக்குத் தேவையான கருவிகள் தொடர்பான விவரங்களை மருத்துவச் சான்றிதழ்களுடன் தத்தமது கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் -

காது கேட்கும் கருவி, மூக்குக் கண்ணாடி, முச்சக்கரவண்டி, சக்கரநாற்காலி போன்ற கருவிகளே சமூக சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்படவுள்ளது என்றும் - பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ-180)

# யாழ்.-மிருசுவில் மார்க்கத்தில் பஸ் சேவைகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.13

யாழ். - மிருசுவில் மார்க்கத்தில் பஸ் சேவைகள் இந்த மாதம் முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த மார்க்கத்தில் போதியளவு பஸ் சேவைகள் இடம்பெறாமை குறித்து இப்பகுதி மக்கள் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொது முகாமையாளரின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி யாழ்ப்பாணத்திலிருந்து மிருசுவிலுக்கு காலை 6.30 மணி, பிற்பகல் 1.30 மணி, 4.30 மணி, 5.15 மணி ஆகிய நேரங்களில் நான்கு சேவைகளும் மிருசுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு காலை 6.50 மணி, 7.35 மணி, மாலை 5.40 மணி 6.25 மணி என நான்கு சேவைகளும் இம்மாதம் முதல் மேலதிகமாக செயற்படுத்தப்படுவதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் செயலாற்று முகாமையாளர் க.பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

தற்சமயம் இடம்பெற்றுவரும் உசன் சேவைக்கு மேலதிகமாக இச்சேவைகள் இடம்பெறும். (ம-15)

# இரணைமடுவிலிருந்து குழாய் மூலம் குடாநாட்டுக்கு நீர் விநியோகம்

## திட்டம் குறித்து ஆலோசனை

சாவகச்சேரி,ஏப்.13

யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கான குடிதண்ணீர் உட்பட நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரணைமடுக் குளத்தில் இருந்து குழாய் மூலம் ஆனையிறவு ஊடாக யாழ்.குடாவுக்கு நீரை எடுத்துவந்து விநியோகம் செய்வதற்கான திட்டம் குறித்து ஆலோசனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நீர்வளச்சபை முகாமையாளர் தெரிவித்தார்.

இத்திட்ட நடைமுறைக்காக சுமார் 302 கோடி ரூபாவரை தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பாரிய நீர்ப்பாசனத் திட்டம் சாத்தியமாகும் பட்சத்தில் சுமார் 4 வருட காலத்தில் இத்திட்டம் பூர்த்தியடையும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டம் செயற்படுத்தப்படும்போது இரணைமடுக் குளத்தின் கட்டு மேலும் உயர்த்தப்பட்டு செப்பனிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தால் குடாநாட்டில் நிலத்தடி நீர் பயன்பாடு குறையும் சாத்தியம் உண்டெனவும் -

ஆனையிறவு ஊடாக அமைக்கப்படும் நீர்க்குழாய் கொடிகாமத்திலிருந்து பிரிக்கப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுமெனவும் - எதிர்காலத்தில் கிணற்று நீரின் தன்மைகள் மாறிவரும் நிலையில் இத்திட்டம் அவசியமானதொன்றெனவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31)





# புத்தாண்டின் இனிமையான 3 மணிநேரம்

## செலான் வங்கியுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் சுபவேளை

- சாதாரண சேமிப்புக் கணக்கில் ரூ.5,000/- அல்லது அதற்கு மேல் வைப்புச் செய்யும் அனைவருக்கும் ரூபா.500/- இ[illegible]வசம்!

- புதுவ[illegible]டைக் கைவிசேட நேரத்தில் செலான் வங்கியின் சா[illegible]தாரண சேமிப்புக் கணக்கில் ரூ.5,000/- அல்லது அதற்கு மேல் வைப்புச் செய்யும் அனைவருக்கும் ரூ.500/- பெறுமதியான டிக்கிரி அன்பளிப்பு வவுச்சர் இலவசமாக வழங்கப்படும்.

- அதனை உங்கள் பிள்ளையின் அல்லது இன்னுமொரு பிள்ளையின் டிக்கிரி கணக்கில் வைப்புச் செய்யலாம்.

  அல்லது புதிய டிக்கிரி கணக்கை ஆரம்பிக்கலாம்.

- இப் புத்தாண்டில் உங்கள் சேமிப்பு வைப்புத் தொகையை ரூ.20,000/- ஆக அதிகரித்து, அதனை 6 மாதங்களுக்குப் பேணிவந்தால்; உங்கள் குடும்பத்திலுள்ள அனைவரும் சீட்டிழுப்பு எதுவுமின்றி எக்காலத்திலும் வெகுமதிகளை வெல்லக்கூடிய மெரிட் ரிவோட்ஸ் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

  புதுவருட[illegible]கைவிசேட நேரம் ஏப்பிரல் 14ம் திகதி பி.ப.2.15 [illegible].

- அன்றைய தினம் பி.ப. 2.00 தொடக்கம் 5.00 வரை நாடெங்குமுள்ள சகல செலான் வங்கிக் கிளைகளும் திறந்திருக்கும்.

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் 021-2223755
021-2223047

**செலான் வங்கி**

அன்புடன் அரவணைக்கும் வங்கி

தலைமையகம்: செலிங்கோ செலான் டவர்ஸ், 90 காலி வீதி, கொழும்பு 3.
தொ.பே: 456789, 074-701000 பெக்ஸ்: 456456, ஈ-மெயில்: info@seylan.lk

JWT

# ஓ ஸீன்களின் அரசன் ரிஷி காளான்



இந்த ரிஷி காளான், 5000 ஆண்டுகளுக்கு முன் சீன, ஜப்பானியர்களால் அறியப்பட்டது. 1972 இல் ஜப்பானில் உள்ள கிளியோடா பல்கலைக்கழக தாவரவியல் ஆய்வாளர்கள் ரிஷியை வெற்றிகரமாகப் பயிரிட்டார்கள்.

தற்போது 24 நாடுகளில் விற்பனையாகிறது

# கனோடெர்மா

## அதிசய உப உணவுப்பொருள் !




ரிஷி காளான் மலேசியா DXN நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டு தற்போது இந்தியா உட்பட 24 நாடுகளில் பாவனைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. ரிஷி காளான் எம் நாட்டிற்கு அறிமுகமானது எம் மக்களுக்குக் கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும். இக்காளானைக் கொண்டு தயாரித்த மாத்திரைகள், கோப்பி, பற்பசை முதலியன இங்கு அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

நோய் தடுப்பிற்கும், நீண்ட ஆயுளுக்கும் மிக முக்கியமானது. கடினமான நோய்களான புற்று நோய், ஆஸ்துமா, ஒவ்வாமை, அதிகப்படியான கொழுப்பு, கொலஸ்ட்ரோல், ஈரல்நோய், சல ரோகம் சோர்வு, உயர் இரத்த அழுத்தம், குறைந்த இரத்த அழுத்தம் இப்படிப்பட்ட ஆட்கொல்லி நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்கின்றது.

மனித உடலில் அழிந்த கலங்களை அகற்றி புதிய கலங்களை உருவாக்கி, தசை நார்களை சீராக இயங்கச்செய்து, உடலில் உள்ள நோய்களைக் குணமாக்கி, நல்ல ஆரோக்கியத்தை கொடுக்கிறது.

### ரிஷி காளான் கிடைக்கும் நிலையம்

**MAGNUM INVESTMENTS (PVT) LTD.**
15, Stamboul Place, Colombo - 03. Tel : 575753, 074-723396, Fax : 370796
DXN E-mail : info@magnu msl.com Web : http::/www.magnumsl.com

### ரிஷி காளான் கிடைக்கும் முகவர் நிலையங்கள்

**கொழும்பு**
திரு. க. கணேசமூர்த்தி
றூம் இல. 1, பம்பலப்பிட்டி, தொடர்மாடி சனசமூக நிலையம் கொழும்பு - 4. தொ. பே. 504084

திரு. நா. சிவகுமாரன்
16 1/1, மூர் றோட், வெள்ளவத்தை, கொழும்பு -6 தொ. பே. 360490

திரு. ராதாகிருஷ்ணன்
S - 26, 2வது மாடி, கொழும்பு சென்ரல் சுப்பர் மார்க்கட் கொழும்பு - 11. தொ. பே. 336375, 436890

திரு. மு. மாரிமுத்து
கனிக்கோஸ், 114/1, 3ம் குறுக்குத் தெரு, கொழும்பு -11 தொ. பே. 578209 439414

திருமதி. உருத்திரமணி
23 கனல் லேன், (பேனி குவிக் ரோட் அப்பால்) கொழும்பு - 6 தொ. பே. 0777-743132, 075-543233

**தெஹிவளை**
திருமதி விஜயலட்சுமி பேரிய சாமி
E.J. 1243 பட்டிசேனநாயக்க மாவத்தை தெஹிவளை. தொ. பே -01-739071

திரு. R. ஜயசேகரா
18 பாத்திமா றோட், கலுபோவில தெஹிவளை, தொ. பே -724259

**பிலியந்தலை**
திரு. H.D. விமல் குணசேகர
36 A. கெஷ்றம, பிலியந்தலை, தொ. பே - 617226, 0777-539085

**புசல்லாவை**
Dr. K. பிரபு சிகாமணி
62, நுவரெலியா றோட், பாரதெக்க, புசல்லாவை. தொ. பே - 08-478570

**கண்டி**
திருமதி ராஜீ கமலோசனி
265, பேராதெனிய வீதி, கண்டி. தொ பே - 08-238783

திரு S. தேவராஜன்
சென்றல் மெடிக்கல், 92, தலதா வீதி, கண்டி. தொ. பே 08-222677, 08-228643

திரு. குமார்
194 A D.S. சேனாநாயக்க வீதி, கண்டி. தொ. பே . 08-237053 08-225039

**நுவரெலியா**
திரு. R.V. ராமலிங்கம்
பெரி & ரசல் கட்டடம் 16. குறுக்குத்தெரு, நுவரெலியா. தொ. பே. 052-22838, 052-23972, 072-150031

**பதுளை**
திரு. N. சசிதரன்
192/42 மஹியங்கன றோட், பதுளை. தொ. பே. 072-506579

**ஹட்டன்**
திருமதி S. நாகரட்ணம்
267/4, புருட் கில் பஸார் ஹட்டன். தொ. பே. 051-24630

**சிலாபம்**
திரு. அன்ரனி செபஸ்தியான் பிள்ளை
42/1 குருநாகல் றோட், சிலாபம். 032-22495

**கிளிநொச்சி**
Dr. K. ஜீவரட்ணம்
8, ஆயுர்வேத வைத்தியசாலை உதய நகர் கிழக்கு, கிளிநொச்சி. தொ. பே. 024-21047

திரு. S. பாலேந்திரன்
C/O Dr. கெங்காதரன் நீலன் பாமசி, பிரதான வீதி, கிளிநொச்சி. தொ. பே. 078-610294

**செங்கலடி**
திரு. க. கலாதரன்
இல: 09, நவீன சந்தை, செங்கலடி. தொ. பே: 065-25488

**மட்டக்களப்பு**
திரு. C. ராஜரட்ணம்
7/9, ஒலிவ் லேன், மட்டக்களப்பு. தொ பே. 065-23374

திரு. யு. தேவேந்திர ராஜா (காந்தி)
513/36, கண்ணகை அம்மன் கோவில் வீதி, மட்டக்களப்பு. தொ. பே. 065-23482

**கல்முனை**
து. ரூபாகரன்
87, உடையார் றோட், கல்முனை. தொ. பே. 067-20056

**புத்தளம்**
Dr. V.K. சண்முக சுந்தரம்
பிரசாந்தி கிளினிக் மன்னார் றோட், புத்தளம். 032-65974, 072-850558

**மாத்தளை**
திரு. S. சந்திரசேகரம்
343, பிரதான வீதி, மாத்தளை. தொ. பே. 066-23799, 066-225 99

திருமதி V. சண்முகராஜா
(மாத்தளை சண்) கண்டி ஸ்டோர்ஸ் 7, ஹரிசன் ஜோன்ஸ் மாத்தளை. 066-31172, 066-22039, 078-742 143

**மன்னார்**
திரு. M. சிமியோன் குருஸ்
சின்னக்கடை, மன்னார். 023-32337

திரு. A.R. விக்டோரியா,
புனித வெற்றிநாயகி கட்டிடம் (Our Lady of Victory Building) கிராண்ட் பஸார், மன்னார். 023-32138

**வவுனியா**
Dr. உமாபதி ஸ்ரீசங்கர்
மெடிக்கிளினிக் 5வது லேன், மன்னார் றோட், வவுனியா. 024-21241, பெக்ஸ் : 024-21283

திரு. S. சிவகுமார்
சிவா பிரதர்ஸ் கொமினியுகேசன் பஸார் வீதி, வவுனியா. 024-22022, 024-22021

**திருகோணமலை**
Dr. ராமச்சந்திரன்
ராம் கிளினிக் 57, பிரதான வீதி, திருகோணமலை. 026-22207

திருமதி J.Y. ரட்ணம்
டொக்கியாட் றோட், திருகோணமலை. 026-21201

திரு. S.சிவபாலன்
ரேன்போ மினிலப் (பிரை) லிமிட்டட் 361, நீதிமன்ற வீதி, திருகோணமலை. 026-23454, 071-340194

**அக்கரைப்பற்று**
திரு. M.R.M. ஸிப்லி ரபீக்
கிழக்கு வீதி, அக்கரைப்பற்று. 067-77427, 072-863860

**கிண்ணியா**
திரு A.K.M. நஜர்
சென்றல் மொஸ்கோ றோட், சின்ன கிண்ணியா, கிண்ணியா. தொ. பே. 026-36340

**யாழ்ப்பாணம்**
Dr. ஈஸ்வரி கந்தையா
மதவடி, சுதுமலை மத்தி, மானிப்பாய். 021-2222554

திரு. T.V. கிருஷ்ணசாமி
இந்திரா ராணி வாசம் சந்தை வீதி, உரும்பிராய். 021-2223392 021-2222654

திரு. வி. விஜயநேசன்
36, கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு யாழ்ப்பாணம். 021-2223123, 021-2223299

திரு. S. தயாளன்டேஸ்வரன்
மாரியம்மன் மிலேனியம் ரேலக்ஸ், பருத்தித்துறை வீதி கோப்பாய். 070-213073, 070-212778

திரு. O. பாலசுப்பிரமணியம்
துன்னாலை மத்தி, கரவெட்டி. 070-70212807

Dr. S. ராஜபூபதி
ராஜா ராஜபதி மெடிக்கல் கிளினிக் மீசாலை தெற்கு, மீசாலை. 070-212538

திரு. S. புஸ்பநாதன்
தர்க்கா புத்தகசாலை கந்தரோடை றோட், சுன்னாகம் மத்தி, சுன்னாகம். 0777-731919

Dr. த. சத்தியசீலன்
மெடி கிளினிக், தொட்டிலடி, சண்டிலிப்பாய்.

Dr. ந. பத்மநாபன்
ரோயல் ஸ்டார் மெடிக்கல் சென்டர் ஸ்ரீ லங்கா ரெலிகொம் முன்பாக மாலுசந்தி, நெல்லியடி. 021-2263106

திரு. மா. ஞானலிங்கம்
அபிராமி மஹால் அச்சுவேலி தெற்கு அச்சுவேலி. 0777-497022, 021-2263403

திரு. மு. தியாகராஜா
ஏழாலை மேற்கு, சுன்னாகம். 0777-491655

திரு. கோ. சிவசுந்தரமூர்த்தி
பெரிய புலம் லேன், கோண்டாவில் றோட், இருபாலை. 0777-291975

திரு. கே. சிவராஜா
ஸ்ரீ விநாயகர் சித்தர் பாமசி K.K.S. றோட், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

Dr. L. கணேகேஸ்வரி
ஸ்ரீ கணேஷா மெடிக்கல் சென்டர், பருத்தித் துறை றோட், கொடிகாமம்.

திரு. எஸ். நிமலன்
6ம் வட்டாரம், வேலணை மேற்கு, வேலணை.

DXN நிறுவனம் மலேசியன் ஒக்கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் ISO 9002 சான்றிதழ் வழங்கப்பட்டு ISO 14001 சான்றிதழ் மூலம் உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது சுகாதார பரிசீலனைக்கும் உட்படுத்தப்பட்டது. 5000 க்கு மேற்பட்ட விநியோகஸ்தர்கள் எம்மிடம் இருக்கிறார்கள்.

eLORA


## கணனிப் பயிற்சி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.13

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகமும், மானிப்பாய் ஐ.எம்.எஸ். கணனி பயிற்சி நிறுவனமும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கென விடுமுறைக் காலத்தில் கணனிப் பயிற்சியினை வழங்கவுள்ளனர்.

மேற்படி பயிற்சி நெறியின் முதலாவது பிரிவு (ஆண்டு - 9) எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் - ஏனைய பிரிவுகளுக்கான பயிற்சிகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத தெரிவிக்கப்பட்டது.

## பெண்ணை பாம்பு தீண்டியது

சாவகச்சேரி,ஏப்.13

நண்பகல் உணவருந்தியபின் வீட்டின் முன்பகுதியில் படுத்திருந்த பெண்ணை பாம்பு தீண்டியது. பாம்பு வீட்டினுள் வருவதை கண்டு சம்பந்தப்பட்ட பெண் சுதாகரிப்பதற்குள் காலில் பாம்பு தீண்டியது.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த மகேந்திரநாதன் மகேஸ்வரி அம்மா (வயது 37) என்ற மேற்படி பெண் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-31)

## முண்டா காஸ் சந்தைக்கு வந்தது!

கொழும்பு,ஏப்.13

பல மாதங்களாகக் எதிர்பார்க்கப்பட்ட முண்டா காஸ் சந்தைக்கு வந்திருக்கிறது. முண்டா காஸ் சிலிண்டர்களின் முதலாவது விநியோகம் காலி துறைமுகத்தில் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒரு சிலிண்டர் முண்டா காஸின் விலை 495 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஈராக் யுத்தம் முற்றாக ஓய்ந்ததும் இந்த விலை 325 ரூபாவாக குறைக்கப்படலாம் என்று வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்திருக்கிறார்.

முண்டா காஸை நிரப்பிக் கொடுக்க எந்த ஒரு வெற்று காஸ் சிலிண்டரையும் ஏற்றுக் கொள்ளுமபடி உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறது.

## கண்காணிப்புக்குழுவை மேலும் விஸ்தரிக்க நடவடிக்கை

கொழும்பு,எப்.13

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளதாக கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெஸ்விசன் தெரிவித்துள்ளார்.

தற்போது 47 உறுப்பினர்கள் கடமையாற்றி வருவதாகவும் - மேலும 6 பேரை கண்காணிப்புக் குழுவில் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)

## திரைப்படக் காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் 'பியானிஸ்ற்' (பியானோ வாசிப்பவன்) என்ற ஆங்கிலத் திரைபடம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படும். இத்திரைப் படத்திற்காக சிறந்த நெறியாளருக்கான 'ஒஸ்கார் விருது' 'ரோமன் பொலன்ஸ்கிக்கும்' சிறந்த நடிகருக்கான விருது 'அட்ரியன் புரோடிக்கும்' வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## சாரதி பணிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.13

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தினால் வாகன சாரதி பணிக்காக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களை யாழ்.செயலகத்துக்கு அண்மையில் உள்ள சோமசுந்தரம் வீதியில் இயங்கும் மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்தில் கிழமை நாள்களில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலவச மருத்துவம்

கச்சாய் பிரதேச மக்களின் நன்மை கருதி மானிப்பாய் 'கியூ மெடிக்கா' நடமாடும் மருத்துவப் பிரிவினர் வைத்திய 'கலாநிதி' ச.சி.அருளானந்தம் தலைமையில் பிரதி வியாழக்கிழமை தோறும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை கச்சாய் வினோபா சனசமூக நிலையத்தில் பொதுமக்களுக்கான மருத்துவ சேவையை இலவசமாக வழங்கி வருகின்றனர்.

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

க.பொ.த.(உயர்தர) - 2005

க.பொ.த. (உயர்தர) - 2005 பிரிவின் மாணவர் அனுமதிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை 21-04-2003 தொடக்கம் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 30-04-2003

- அதிபர்.

(சி-27327)


## வட்டு.ஆஸ்பத்திரிக்கு பொறுப்பதிகாரி நியமனம்

வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக திருமதி தம்பிராசா இம்மாதம் முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி பி.பேரானந்தராசா இங்கு பதில் கடமையாற்றியிருந்தார்.

(எ-14-100)


அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த புதுவருட வாழ்த்துக்கள். உங்கள் உறவுகளுடன் உறவாட இன்றும் நாளையும் (13,14) இன்ரநெற் கட்டணம் நிமிடத்துக்கு 10/- மட்டுமே.

நெருக்கடியைத் தவிர்க்க முந்துங்கள்

குட்வில் கொமினிக்கேசன்

48, சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(16703) உரிமை: அ.பரஞ்சோதி J.P.


## 31ஆம் நாள் முகிழ்விடும் நினைவும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

### வைத்தி பூரணம்

மண்ணில் 29 - 07 - 1940 விண்ணில் 14 - 03 - 2003

என்ன மாதவம் செய்தோம் யாம்
அன்னையாய் எமக்கு நீர் வாய்த்திட
அன்புடன் எம்மை அரவணைத்தீர்!
புன்முறுவல் பூத்தே புகழுடன் நாம் வாழ
நன்நெறி பகிர்ந்து நல்வழி காட்டினீர்!
துன்பத்தில் எம்மைத் துடிக்க விட்டு
மின்னலாய் மறைந்தீர் என் செய்வோம்?

14.03.2003 அன்று சிவபதமடைந்த எங்கள் குல தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தி இறுதியாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும் பத்திரிகை, கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரங்கள், தொலைபேசி, தபால் என்பனவற்றின் மூலம் அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவியும் ஒத்தசையும் புரிந்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிந்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (C/27385) பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.


## சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சை 2003

மேற்படி பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் தமிழ், முஸ்லிம் மாணவர்களின் நன்மை கருதி எமது வகுப்புகள் தற்பொழுது ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 8.30 - 1.30 மணி வரை நடைபெறுகின்றன. கடந்த 10 வருடங்களாக தமிழ்மொழி மூலம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளைக் கொண்டு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

சட்டக்கல்லூரி அனுமதிக்கான ஆகக்குறைந்த தகைமைகள்

1. G.C.E.(A/L)இல் 3 பாடங்களிலும் (புதிய பாடத்திட்டம்) or 4 பாடங்களிலும் (பழைய பாடத்திட்டம்) ஒரே தடவையில் சாதாரண சித்தி (S)
(கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம், கலை எப்பிரிவாக இருந்தாலும் சட்டக்கல்வி பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பாடங்களாக இருத்தல் வேண்டும்)
2. G.C.E.(O/L) இல் தமிழிலும், ஆங்கிலத்திலும் திறமைச் சித்திகள் (C) சட்டக்கல்லூரி அனுமதிக்கு வயதெல்லை கிடையாது.

விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 30-04-2003

(சி-27377)

SANGAM

LAW ENTERANCE CLASSES

No.7, 57th Lane (Off Rudra Mawatha) Colombo 6.

மேலதிக விவரங்களைப் பெற மேற்குறித்த தகைமையுடையவர்கள் சுயமுகவரி இடப்பட்ட ரூபா 4.50 முத்திரை ஒட்டிய 9"X 4" கடித உறையுடன் மேற்படி முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.


## 15ஆவது ஆண்டு நினைவு தினம்

தோற்றம் 18 - 12 - 1922



மறைவு 28 - 03 - 1988

அமரர் வ.வ.கயிலாசபிள்ளை (V.V.K.)

திதி:13.04.2003

பதினைந்து வருடங்கள் பறந்தோடி போயென்ன! எம்
பதிதனிலே உங்கள் நினைவும் பற்றறுந்து போய்விடுமா?
கதியற்று நாமிங்கு கலக்கமே உருவாக - எம்
விதிதனை என்னுவோமோ? வினைப் பயன் இது தானோ!

"கமலாம்பிகை பவனம்"
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (16684) மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 1940 - 07 - 07



இறப்பு 2003 - 03 - 14

### அமரர் வடிவேலு ஞானலிங்கம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவினை அறிந்து ஓடோடி வந்து எமது பிரிவுத்துயரில் பங்குகொண்ட உறவுகள் அனைவருக்கும் தந்திகள், தொலைபேசிகள் மூலம் துக்கம் பகிர்ந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (13.04.2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி. (16494) - குடும்பத்தினர்.


அழகிய கூந்தலின் ரகசியம்




பக்கவிளைவு அற்றது

பயோட்டினெக்ஸ் - E

பயோட்டினுடன் விட்டமின் - Eயும் சேர்ந்துள்ளதால் சிறந்த பயன் கிடைக்கும்

எது உங்கள் பிரச்சினை ?

- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறண்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா



இவ்வனைத்து பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

பாவனை முறை: தினம் 2 கப்சியூல்ஸ் 1 மாத காலத்திற்கு பாவிக்கவும்

BIOTINEX - E

இயற்கையான பயோட்டினெக்ஸ்-E தெற்காசிய மக்களுக்கென பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

யாழ் முகவர்

ஜெகன் பார்மசி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021 2223191

வன்னி முகவர்

அகிலன்ஸ் பார்மசி, (பிள்ளையார் மருந்தகம்) கிளிநொச்சி.

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By : Arkem Colombo

Tel : 470290, 073-344436 Email : arkem@sltnet.lk

பயோட்டின் H உடன் இயற்கையான விட்டமின் E சேர்க்கப்பட்டு தற்போது பயோட்டினெக்ஸ் E என்ற பெயரில் அறிமுகமாகிறது.

# இதோ இன்று முதல் யாழ் மக்களுக்கு சன்குவிக் பழரசம்

பல்வகை பழங்களினால் அவற்றின் தரச் சுவைக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ள இச் சன்குவிக் பழரசம் இன்று முதல் உங்கள் மண்ணில்.




sunquick அதிக பழங்கள் அதிக கோப்பைகள்

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன இயக்குநராகிய திரு.சி.சுரேஸ்குமார் அவர்களின் தந்தையாரான

## நாராயணப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

*(மணியம் களஞ்சியம், கொடிகாமம்)*

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**Jaffna Technical Institute *(JTI)***
Computer Division.
*Palaly Road, Jaffna.*

(16755)

விரிவுரையாளர்கள்,
மாணவர்கள்.



# கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில்
11 - 09 - 1978



ஆண்டவன் அடியில்
12 - 04 - 2003

நேற்றுவரை எம்மோடு நேசக்கரம் கோர்த்து எம் பாசவலையறுத்தின்று பார்விட்டுப் பறந்துவிட்ட - எம் பல்கலைத் தோழன்

## செல்வன் தர்மலிங்கம் பரம்சோதி

அவர்களின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தவர்க்கு - எம் ஆழ்ந்த அனுதாபங்களும் எம் இதய நண்பனுக்கு எம் இறுதிக் கண்ணீர்ப் பூக்களும்...!!

நண்பர்கள்
வயம்ப பல்கலைக்கழகம்.

(16758)



# கோலாகல திறப்பு விழா

14-04-2003 சித்திரைத் திங்கள் காலை 10மணி

## செல்லாச்சி புத்தகசாலை

*(வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு அருகில்)*

பாடசாலை உபகரணங்கள், மாணவர்களின் கைநூல்கள், பயிற்சி நெறிகள், பயிற்சிக் குறிப்புகள், அப்பியாசக் கொப்பி, பாடப் புத்தகங்கள், காகிதாதிகள், பலவகை வாழ்த்து மடல்கள், பரிசளிப்பு விழாப் பொருள்கள், பிறந்தநாள் பரிசுகள், அழகு சாதனப் பொருள்கள் அனைத்தும் மலிவான விலையில் சில்லறையாகவும், மொத்தமாகவும் கிடைக்கும்.

*உங்கள் கல்வித் தேவைகட்கு நாடுங்கள்.*

செல்லாச்சி புத்தகசாலை
பிரதான வீதி,
பருத்தித்துறை.

(C27392)


## சமுர்த்தி வங்கி திறப்பு

காரைநகர்,ஏப்.13

காரைநகர் சமுர்த்தி வங்கி சங்க திறப்பு விழா எதிர்வரும் 16ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் என்.சிவபாதசுந்தரம், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் ஆகியோரும் -

கௌரவ விருந்தினர்களாக விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை சமுர்த்தி முகாமையாளர் செல்வி எம்.வி.லயோனிற்றா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். காரைநகர் அல்வின் வீதியில உள்ள கட்டடத்திலே வங்கி திறந்து வைக்கப்படவுள்ளது. (ம-73)

## வன்னிப் பகுதிக்கு 13 தபாலதிபர்கள்

வன்னிப் பகுதிக்கு 13 தபாலதிபர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தபாலதிபர் தரம் II இற்கு புதிதாக நியமனம் செய்யப்பட்டவர்களில் இருந்தே மேற்படி 13 பேரும் வன்னிப்பகுதிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் உரிய தபாலகங்களில் கடமையைப் பொறுப்பேற்பர் எனக் கூறப்பட்டது. (எ-12)

## தமிழகக் கலைஞர்களின் தவில் கச்சேரி!

கோண்டாவில்,ஏப்.13

தமிழகத்தில் இருந்து வருகை தந்துள்ள பிரபல தவில் கலைஞர்களான ரி.ஏ.கலியமூர்த்தி, ரி.ஜீ.முத்துக்குமாரசாமி ஆகியோரின் விசேட கச்சேரி தாவடி ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை மாலை இடம்பெறவுள்ளது.

நாதஸ்வர வித்துவான் வி.கே.பஞ்சமூர்த்தி, கே.பி.குமரேஸ் ஆகியோர் இக்கச்சேரியில் நாதசுரம் வாசிப்பர். (ம-85)

# அச்சுவேலிச் சந்தையில் சுகாதாரச் சீர்கேடு

அச்சுவேலி,ஏப்.13

அச்சுவேலி பொதுச் சந்தையில் நிரம்பிக் காணப்படும் குப்பை கூளங்கள் காரணமாக பெரும் துர்நாற்றத்தின் மத்தியில் வியாபாரம் செய்ய வேண்டியுள்ளதாக வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலி பொதுச் சந்தையின் உட்புறம் தினசரி துப்புரவு செய்யப்படாமல் வாரந்தோறும் குறிப்பிட்ட தினங்களில் மட்டும் அகற்றப்படுகின்றன என்றும்

தினசரி துப்புரவு செய்யப்படாமையால மரக்கறிக் கழிவுகள், மீன் சந்தைக் கழிவுகள், இறைச்சிக்கடைக் கழிவுகள தேங்கிக்கிடந்து துர்நாற்றம் வீசுகின்றன என்றும் - அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

சந்தையில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளும் சந்தையில் பொருள்களைக் கொள்வனவு செய்யவரும் பொதுமக்களும் மேற்படி சுகாதாரச் சீர்கேடு காரணமாக பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாவதாகவும் - கூறப்பட்டது. (எ-11)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று 2002ஆம் ஆண்டு க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். 8ஏயும் அதற்கு மேலான பெறுபேற்றையும் பெற்ற மாணவர்களை 16-04-2003 பி.ப. 5.00மணிக்கு நடைபெறும் தேநீர் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
பா.அ.சங்கம், ப.மா.சங்கம்.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

(16729)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் நா.இராமலிங்கம்

*(ஓய்வுபெற்ற அதிபரும், சமாதான நீதிவானும்)*

மண்ணில் 20-07-1926 • விண்ணில் 23-04-2002

ஆண்டொன்று உருண்டோடிப் போன போதும்
ஆறவில்லை யெங்கள் துயர் இன்னும் ஐயா!
மாண்டவர்கள் மீண்டதில்லை என்றவுண்மை
உணர்ந்தபின்னும் ஏங்குகின்றோம் உங்கள் பிரிவால்
அம்பிகையின் பாதங்கள் தினமும் போற்றி
அவளருளை வேண்டுகின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*54, கலைமகள் வீதி,*
*அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.* (16757)



# LION AIR

T.P. 3564 074 - 515615

# SERENDIB EXPRESS

T.P. 3916 0777 - 512648

# EXPO AVIATION

T.P. 3891 071 - 349999

ஆகிய 3 விமானங்களுக்குமான
**யாழ் - கொழும்பு, கொழும்பு - யாழ்.**
விமான ரிக்கெற்றுக்களை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*தொடர்பு:*

## ஹெப்பி இம்பெக்ஸ்

புதிய உயர் கல்லூரி,
95, பருத்தித்துறை வீதி,
ஆரியகுளம் முன்பாக, யாழ்ப்பாணம்.
*தொலைபேசி: 077-6038505*

(16741)


# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவுவகைகள் வழங்கலுக்கான கேள்வி கோரல்

1) யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு 1500 மெற்றிக் தொன் பிறிமா கிறீன்மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| மாதாந்த கேள்வித் தொகை | | |
|---|---|---|
| 2003 ஏப்ரல் | 2003 மே | 2003 ஜூன் |
| 1500 MT | 1500MT | 1500 MT |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்கமுடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2003.04.15ஆம் திகதி தொடக்கம் 2003.04.29ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாள்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2) கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி - Bid Bond) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01 Mt.) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

3) பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.04.30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

4) நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிறிமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்படவேண்டும்.

5) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது).

**செ.பத்மநாதன்**
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
2003.04.11

(C/27399)

# மரண அறிவித்தல்

## திருமதி விஸ்வலிங்கம் மதியாபரணம்

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி விஸ்வலிங்கம் மதியாபரணம் நேற்று (12.04.2003) சனிக்கிழமை சிவபதம அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் ஆ.விஸ்வலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமசாமி, கிருஸ்ணசாமி, மயில்வாகனம் மற்றும் திருமதி வ.கனகமணி (கனடா), திருமதி தி.திலகவதி, துரைசிங்கம் (வர்த்தக முகாமையாளர், ப.நோ.கூ. சங்கம் சங்கானை), மகாதேவன் (ஆசிரியர், யாழ்.வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சி.வைரமுத்து (முன்னாள் பொறியியலாளர், இ.போ.சபை - கனடா), பொ.திருவாதவூரர் (பென்சனர்), திருமதி கி.சந்திரா , திருமதி ம.நேசமலர், திருமதி து.பராசக்தி, திருமதி ம.கலைராணி (பிரதி அதிபர், யா/பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அருள்மொழி, சிறிதர்மா (அமெரிக்கா), பொன்மொழி சிறிஸ்கந்தராசா (ஆஸ்திரேலியா), தி.பொன்னம்பலம், தி.அனுசூயா (ஆசிரியர், யா/வேலணை சைவப்பிரகாச ம.வி.), ம.வனிதா (மாணவி, இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்), ம.சாந்தினி, ம.சிரஞ்சீவன், கி.கிருஸ்சந்தர் (சவுதி அரேபியா), கி.அபிராமி (மாணவி, கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்), கி.தாட்சாயினி, கி.சஞ்சீவன், கி.கல்ப்பனா, து.லலிதா, து.ரஜீவ், து.ரவிராஜ், து.விசுவராஜ், ம.ஜெகஜீவன், ம.பிருந்தாவன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.04.2003) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு நடைபெற்று, திருவடிநிலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*'தென்றல்',*
*பண்ணாகம்,*
*சுழிபுரம்.*

(16753)

தகவல்:
மக்கள்

# கௌரவத்துடன் கூடிய சுயதொழிலுக்கு ஹோட்டல் முகாமைத்துவம் வழிகாட்டும்

## பயிற்சிக் கல்லூரி உபஅதிபர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஏப்.13

கௌரவமான சுயதொழிலைப் பெற்றுக்கொள்ள ஹோட்டல் முகாமைத்துவக் கற்கைநெறி வழிகாட்டும்.

இவ்வாறு தெரிவித்தார் ஹோட்டல முகாமைத்துவக் கல்லூரியின் உப அதிபர் ஆ.கதிர்காமலிங்கம்.

யாழ்.மத்திய கல்லூரி உயர்தர மாணவர்களுக்கென ஏற்பாடு செய்யப பட்ட ஹோட்டல் முகாமைத்துவம் சார்பான கருத்தரங்கு கடந்த புதனன்று கல்லூரி மண்டபத்தில் நடைபெறறது.

அதில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தென்பகுதி மாணவர்கள் பலர் தமது கல்லூரி வாழ்க்கையை நிறைவு செய்த பின்னர் ஹோட்டல் முகாமைத்துவக் கல்லூரிகளில் இணைந்து தமது பட்டப்படிப்பை மேற்கொள்வதுடன், பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு பெரும் வருமானத்தையும் பெற்றுக்கொள்கின்றனர்.

வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளை சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடுத்தி அதனை ஊக்குவிக்கும் வகையில் யாழ்.குடா நாட்டிலும் ஹோட்டல் முகாமைத்துவக கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டு கடந்த நிலையிலும் இங்கு கல்வி கற்கும் மாணவர் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. இந்த நிலை மாற்றி அமைக்கப்படவேண்டும்.

குடாநாட்டில் வேலையின்றி இருக கும் இளஞ்சமுதாயத்தினர் இதன முக்கியத்துவத்தை உணர்ந்து மேற்படி கற்கைநெறியை பயில முன்வரவேண டும். இதன்மூலம் ஏனையவர்களின் கைகளை நம்பாது சுயமாக தொழில வாய்ப்பை பெற்றுக்கொள்ள முயற் சிக்கவேண்டும்.

ஹோட்டல் பாடசாலைகளில் வரவேற்பாளர், அறைகள் மற்றும் பொது விடங்கள் பராமரிப்பு, உணவு வகைகள் பரிமாறுதல், உணவு தயாரித்தல எனப் பல்வேறு விடயங்கள் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படுகின்றன.


ஜேர்மனி, ஜப்பான், பிரான்ஸ் நாடுகளின் மொழிகளும் இங்கு விசேடமாகக் கற்பிக்கப்படுகின்றன.

பல்வேறு மொழிகளையும் கற்பதன மூலம் இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இத்துறைசார்ந்த தொழிலைத் தேடிக்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

ஹோட்டல் முகாமைத்துவம் என பது ஏனைய துறைகளைப்போன்றது தான். இக்கற்கைநெறியின் மூலம் சிறப்புத் தேர்ச்சி பெற்று பட்டதாரியாக முடியும். ஹோட்டல் முகாமைத்துவத தில் பட்டம் பெற்றபின் ஹோட்டல்களில தான் வேலை செய்யவேண்டும் என்ற நியதியில்லை. அதனைவிட இத துறையில் விரிவுரையாளராகவோ அன்றி பேராசிரியர்களாகவோ வருவ தற்கான வாய்ப்புக்களும் உண்டு.

இலங்கை ஹோட்டல் பாடசாலையில் கல்விகற்று வெளியேறுபவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் உலகளாவியரீதியில் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. இங்கு கற்பிக்கப்படும் அனைத்துப் பாடத்திட்டங்களும் சர்வதேச ஊழியர் சபையினால் அங்கீகரிக் கப்பட்டவை. இந்தச் சான்றிதழைக் கொண்டு எந்த நாட்டிலும் வேலையைத் தேடிக்கொள்ளலாம்.

எனவே,யாழ்.குடாநாட்டில் உள்ள மாணவர்கள் தமக்குக் கிடைத்துள்ள இந்த அரிய சந்தர்ப்பத்தினை முறைப படி பயன்படுத்தி பயன்பெறவேண்டும - என்றார். (எ-5)



கிளிநொச்சி யோகர் சுவாமிகள் திருவடிநிலைய முதியோர் இல்லத்தில இடம்பெற்ற நிகழ்வில் மூதாட்டி ஒருவருக்கு அன்பளிப்பு வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

# கல்வித்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் வலிகாமம் கல்வி வலயத்தில் விஞ்ஞான ஆசிரியர் சங்கம்

## பரீட்சை, கருத்தரங்கு நடத்த ஏற்பாடு

வலிகாமம் தெற்கு,ஏப்.13

வலிகாமம் கல்வி வலயத்தின் விஞ்ஞான பாட ஆசிரியர்களின் சங் கம் ஒன்று அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக விஞ்ஞானக் கல்வியின் தரம் வீழ்ச்சியடைந்து காணப்படுவதையடுத்தே அதன் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இந்த ஆசிரியர் சங்கம் உருவாக்கப் பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

வலிகாமம் கல்விவலய அனைத் துப் பாடசாலைகளையும் சேர்ந்த விஞ்ஞான பாட ஆசிரியர்கள் வலி காமம் கல்விவலயத்தில் ஒன்று கூடி இதனை ஆரம்பித்துள்ளனர்.

வலிகாமம் வலய விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.விஜயேந்திரசர்மா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் சிறப்புரையாற் றினார்.

விஞ்ஞானக் கல்வியின் அபிவிருத் திக்கேற்ப, மாணவர்களால் படித்து விளங்கிக் கொள்ளக்கூடிய முறையி லான விஞ்ஞான உதவி நூல்கள் சங்கத்தால் வெளியிடப்படவேண்டும் என கல்விப் பணிப்பாளர் தமது உரையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இவ்விஞ்ஞான ஆசிரியர் சங்கம் அதன் ஆரம்ப நடவடிக்கையாக தரம் 11 இல் கல்வி பயிலும் மீத்திறன குறைந்த மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தவும் பரீட்சைகள் நடத்தவும் நடவடிக்கை எடுக்கவுள் ளது.

விஞ்ஞானம் தொடர்பான பொருட காட்சிகள், கருத்தரங்குகள் என்பன வற்றையும் சங்கம் நடைமுறைப் படுத்தவுள்ளது.

சங்கத்தின் தலைவராக இ.ஜோர்ச், செயலாளராக செல்வி எஸ்.வளர்மதி, பொருளாளராக இ.முருகதாஸ் ஆகி யோர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஒவ்வொரு கோட்டத்துக்கு இரண்டு ஆசிரியர்களை உள்ளடக்கி 15 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (எ-152)

# நல்லூர், கோப்பாய் பகுதிகளில் மனிதவள அபிவிருத்திப் பயிற்சி

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஏப்.13

நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் வசிக்கும் இளைஞர், யுவதிகளிடம் இருந்து மனிதவள அபிவிருத்திப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கட்டுமானம், மரவேலைப் பயிற்சி ஆகியவற்றுக்கு ஆண்டு 8 வரை கல்வி கற்ற ஆண்களிடமிருந்தும் -

பண்ணை வேலைப் பயிற்சிக்கு ஆண்டு 8 வரை கல்வி பயின்ற பெண்களிடமிருந்தும் -

விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கணனிப் பயிற்சிக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில பாடத் தில் சாதாரண சித்திபெற்ற இருபா லாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர் தொழில்சார் பின்னணியைக் கொண்டிருந்தால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக் கப்படும்.

மேற்படி விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் னதாக அவ்வப் பிரதேச செயலகங் களுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (ஒ-180)

# இணைந்த கணிதம் வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.13

ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் இணைந்த கணிதப் பாடத்துக்கு தோற்றும் மாணவர்களுக்கான வழி காட்டல் கருத்தரங்கு நாளை திங் கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியால யத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் அறிவொளி கல்வி நிறு வனத்தின் ஆதரவில் இடம்பெறும் இக்கருத்தரங்கில் யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.ஸ்ரீசற்குணராஜா கருத்துரை வழங் குவார். (ம-3)


ITN SALES ITN SALES ITN SALES ITN SALES ITN SALES ITN SALES ITN SALES ITN SALES

ITN மாபெரும் புதுவருட மலிவு விற்பனை

புதுவருடத்தை முன்னிட்டு பழைய, புதிய சினிமாப் பாடல்கள், பக்திப் பாடல்கள், கர்நாடக சங்கீதம், சமஸ்கிருத CDகள், VCDகள் மற்றும் MP-3 CDகள் அனைத்தும் மாபெரும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

* ஓடியோ வீடியோ CDகள் 90/- முதல்

"உங்கள் தெரிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்"

குறிப்பு: இச்சலுகையானது 14.04.2003வரை மட்டுமே

ITN வீடியோ ஓடியோ மியூசிக் சென்றர்

305, பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, யாழ்ப்பாணம்.

(C/27404)

ITN SALES ITN SALES ITN SALES ITN SALES ITN SALES ITN SALES ITN SALES ITN SALES



சகல விதமான PHONE CARDS விற்பனைக்குண்டு!

SRI MURUGAN COMMUNICATION SERVICE

303, K.K.S. Rd, Jaffna.

T.P. : 021 222 2670

Fax : 021 222 3214

(C/27402)



நாகம்ஸ் சுன்னாகம்

விஜய், ஸ்நேகா, ரகுவரன் நடித்த

வசீகரா (தினம்)

14 ஆம் திகதிமுதல்

என்றென்றும் காதல்

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நேரம)

(16760)



ராஜா யாழ்ப்பாணம்

ஸ்ரீகாந்த், பூரிகா, விவேக், ராதிகா

ரோஜாக்கூட்டம்

10.30, 2.30, 6.30

HOLLOW MAN

இரவு 9.30 மட்டும்

புதுவருட வெளியீடு - அரசு



நிறைஞ்சனாஸ்

கா.நேரம்- 11.00, 2.45, 6.00 (பு.நே.)

JURASSIC PARK 3

BEST OF THE BEST

14 ஆம் திகதி முதல் ரமணா



லக்சுமி இணுவில்

அர்ஜுன், மீனா, ரம்பா, ஆனந்தராஜ் நடித்த

செங்கோட்டை

தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)

புதுவருட வெளியீடு 14.04.2003 முதல்

சமஸ்தானம்



கொழும்பு மாநகரில் ஸ்ரீ சௌபாக்கிய இன் உங்களை அன்புடன் வரவேற்கிறது

☆ தொலைத் தொடர்பு வசதிகள்

☆ விமான நிலையத்துக்கு வான், ஆட்டோ வசதிகள்

☆ குளிரூட்டப்பட்ட அறைகளும், குளிரூட்டப்படாத அறைகளும்

☆ இருக்கலை மலசலகூட வசதிகளும்

☆ 24 மணி நேரமும் உங்கள் சேவையில் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

ஸ்ரீ சௌபாக்கிய இன்

No. - 67A

WOLFENDHAL STREET

CO. - 13

Tel - 338163

338165

338166

Fax - 338161

(16408)


## கண்ணீர் அஞ்சலி



எமது ஆருயிர் நண்பன்

**தர்மலிங்கம் பரஞ்சோதி**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிறை வாழ்வக

கொக்குவில் நண்பர்கள்

(16759)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவக்கொழுந்து சுப்ரமணியம்

மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து சுப்ரமணியம் அவர்கள் நேற்று (12.04.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - செல்லாச்சி தம்பதிகளின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்ற சிவசம்பு, இராசம்மா, துரைராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் சுப்ரமணியம் (வர்த்தகர், நிவிட்டிகல) அவர்களின் அன்பு மனைவியும் கௌசலாதேவி, புஸ்பராணி, மங்களேஸ்வரி, சிவபாதசுந்தரம் (கனடா), ரஞ்சினி, கலாநிதி (ஆசிரியை, வட்டு. கார்த்திகேய வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் தவராஜா, காலஞ்சென்ற அரியகுட்டி, சரவணபவன், நாகநந்தினி, சங்கரலிங்கம், புவனேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

*'கலா வாசம்'*
*மூளாய் வீதி,*
*வட்டுக்கோட்டை.*

(சி-27403)

தகவல்:
குடும்பத்தினர்.

## தம்பிராசா நேசராசா

*(சீமோலின் மகன் செல்வம்)*

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா நேசராசா 10.04.2003 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பிராசா - நேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் நேசரூபி(ஜேர்மனி), பாபு(டென்மார்க்), ரவிச்சந்திரன்(ஜேர்மனி), ரவீந்திரன் (நோர்வே), குமார் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் புனிதராசா (ஜேர்மனி), டொனி (டென்மார்க்), கீதா (ஜேர்மனி), சாந்தகுமாரி (நோர்வே), தர்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.*

(16754)

தகவல்:
குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்.

# ஜப்பான் மாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படும் கலந்துரையாடலுக்கு வேண்டுமென்றே புலிகள் புறக்கணிக்கப்பட்டிருப்பது பரஸ்பர நம்பிக்கையைச் சிதறடிக்கும் நடவடிக்கையாகும்.

"உதவும் நாடுகள் கூட்டத்துக்கான முன் ஆயத்தங்களைச் செய்யும் இந்த மாநாட்டுக்காக சரியான இடத்தைத் தெரிவு செய்யாததன் மூலம் அந்தக் கூட்டத்தில் புலிகள் பங்குபற்றுவதை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசும், அனுசரணையாளர்கள் என்ற முறையில் நோர்வேயும் தவறிவிட்டன. அது எமக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது" - என்று அந்த அறிக்கை தெரிவித்தது.

தமிழ் அகதிகள் மற்றும் நாட்டுக்குள் இடம்பெயர்ந்தோரை மீள் குடியமர்த்தி அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பது தொடர்பாக முதற்சுற்றுப் பேச்சுக்களில் இலங்கை அரசும் புலிகளும் கூட்டு செயற்பாடுகள் மூலம் மேற்கொள்வதற்கு பிரேரிக்கப்பட்ட நடவடிக்கைகள் 'சம்பந்தப்பட்ட தரப்புகள் தமக்கிடையிலான பரஸ்பர நம்பிக்கையை வலுப்படுத்துவதையும், இணைந்து செயற்படுவதற்கான விருப்பை வெளிப்படுத்துவதையும் குறிக்கும் சமிக்ஞைகளாக' பாராட்டப்பட்டதை அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள புலிகள், முக்கியமான இந்த முன் ஆயத்த மாநாட்டில் புலிகள் புறக்கணிக்கப்பட்டமை பரஸ்பர நம்பிக்கையையும் இலங்கை அரசின நோக்கம் தொடர்பான எமது உறுதிப்பாட்டையும் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

பெப்ரவரி 2002 இல் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் அதற்குப் பின்னர் பேச்சு மேசையில் காணப்பட்ட உடன்பாடுகளையும் மீறும் விதத்தில் தமிழரின் வீடுகள், பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பொதுக் கட்டடங்களை இலங்கை இராணுவம் தொடர்ந்தும் ஆக்கிரமித்திருப்பதை புலிகளின் அறிக்கை மிகக் கடுமையாக விமர்சித்திருந்தது.

"இலங்கை இராணுவத் தலைமையின் விட்டுக்கொடுக்காத பிடிவாதப் போக்கும் ரணில் நிர்வாகத்தின செயற்றிறனின்மையும் பல நூறாயிரம் தமிழ் அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்தோருக்கான மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்களை சாத்தியமற்றதாக்கிவிட்டன.

"சமாதானப் பேச்சுக்களில் எட்டப்பட்ட முடிவுகளும், காணப்பட்ட தீர்வுகளும் நடைமுறைப்படுத்தப்படாமல் போவது, பேச்சு முயற்சிகளில் பெறுபேற்றை கேள்விக்குள்ளாக்கியிருப்பதோடு, அவற்றின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையையும் குன்றச் செய்துள்ளது" - என்று அறிக்கை தெரிவிக்கின்றது.

"நீடித்த கொடூரப் போரினால் இலங்கை முழுவதும் பாதிப்புற்றது என்றாலும் வடக்கும் கிழக்குமே போரினாலும், பல தசாப்தகால அபிவிருத்தி இன்மையாலும் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் என்பதையும், அதனால் அதிகளவு சர்வதேச உதவி அவற்றுக்கே அபாரமாகத் தேவைப்படுகின்றன என்பதையும் நாம் சுட்டிக்காட்டுகிறோம்.

"தமிழரின் உடைமைகள் மற்றும் கட்டடங்களை இராணுவம் ஆக்கிரமித்து நிற்பது ஒருபுறம் தொடர, வடக்கு - கிழக்கில் மீள்குடியேற்றம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதிலும் ஏற்றுக்கொள்ள முடியாத தாமதமும் நிலவுகின்றது.

" இந்தச் சூழ்நிலையில், இந்த முக்கிய சர்வதேச மாநாட்டில் தமிழ் மக்களின் நலன் மற்றும் அபிலாஷைகளைத் தெளிவாகப் பிரதிபலிப்பதற்காக அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் அதற்கு அழைக்கப்பட்டிருப்பது நீதியும் நியாயமுமாக இருக்கும்" - என்றும் அந்த அறிக்கை தெரிவித்தது.

"பெப்ரவரி 2002 யுத்தநிறுத்த உடன்படிக்கையில் வழமைநிலை ஏற்படுத்துவது தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையும், அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம் தொடர்பாக இரு தரப்பினராலும் கடந்த ஆறுசுற்றுப் பேச்சுக்களில் காணப்பட்ட உடன்பாட்டு ஏற்பாடுகளையும் முழுதாக நடைமுறைப்படுத்துவதன்மூலம் நம்பிக்கையை மீள வலுப்படுத்தி, நல்லெண்ணத்தை மீளக்கட்டியெழுப்பும்படி புலிகள் கோருகின்றனர்" - என்று அந்த அறிக்கையின் இறுதியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

சீன ட்றோலர் தாக்கப்பட்ட சம்பவத்தில் கடற்படையோ விடுதலைப் புலிகளோ சம்பந்தப்படவில்லையென யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. எந்தவித சாட்சியமும் இன்றி இந்தச் சம்பவத்தில் மூன்றாவது ஆயுத சக்தி ஒன்று சம்பந்தப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளதை ஆட்சேபிக்கின்றோம்.

இந்தத் தாக்குதலில் கடற்படையோ விடுதலைப் புலிகளோ சம்பந்தப்படவில்லையென்றால் பகிரங்கத் தீர்ப்பு வழங்கியிருக்கலாமே?- இப்படி அவர் தமது ஆட்சேபத்தில் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக் குழுவின் இந்த அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்து அண்மையில் ஜனாதிபதியும் காட்டமான கடிதம் ஒன்றை குழுவின் தலைவருக்கு அனுப்பியிருந்தார். (ம-3)

## ஒலிபெருக்கி சாதனம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.13

துன்னாலை மேற்கு கலிகை கந்த சுவாமி கோயிலில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் வைபவத்தில் ஆலயத்துக்கு ஒலிபெருக்கி சாதனங்களை இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அன்பளிப்பாக வழங்கவிருக்கின்றார்.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த விதவைகள், அனாதைகளுக்கு உடுபுடைவைகளையும் அமைச்சர் அன்பளிப்புச் செய்யவிருக்கின்றார். (ம-3)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சூ.சிறில் விளக்கமளித்தார்.

மேதின ஊர்வலம் நல்லூர் ஆலய சுற்றாடலில் இருந்து ஆரம்பமாகி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

அங்கு மாபெரும் பொதுக் கூட்டமும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

இந்த ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் இலட்சக் கணக்கில் மக்களைக் கலந்துகொள்ளச் செய்வதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சனசமூக நிலையங்கள், தொழிற்கூடங்கள், திணைக்களங்கள் மற்றும நிறுவனங்கள் தமது அமைப்புக்கள் ஊடாக மக்களைத் திரட்டி பதாகைகள் மற்றும் ஊர்திகளையும் ஏற்பாடு செய்து மேதின எழுச்சியை வெளிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

இம்மேதின எழுச்சியில் பெருமளவான மக்களை அணி திரட்டுவதற்கான முயற்சிகளை இன்றுமுதல் குடாநாடு தழுவிய ரீதியில் முடுக்கிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுக்களுக்கு வலுச் சேர்ப்பதாய், தமிழ் மக்களின் அவலங்கள் அபிலாசைகளை தென்னிலங்கைக்கும் சர்வதேசத்திற்கும் மீண்டுமொரு தடவை எடுத்துரைப்பதாய் இந்த மேதின எழுச்சியில் ஒன்று திரளுமாறு ஏற்பாட்டாளர்கள் பொது மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். (ம-4)

## வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொத்த வருமானத்தைவிட இத்தொகை 20 மடங்கு அதிகமானது என்றும் -

ஐந்து வருட காலத்தில் மிகக் குறைந்த வட்டியான ஐந்து சதவீத வட்டியுடன் இத்தொகை மீளச் செலுத்தப்படும் என்றும் - அவர் மேலும் கூறினார்.

நாளை வாஷிங்ரனில் இடம்பெறும் கூட்டத்தில் பங்குகொள்வதற்காகச் சென்றுள்ள ஆளுநர் அங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் இத்த கவலை வெளியிட்டுள்ளார்.(ம-3-12)

# கைதடி சைவச் சிறுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

22 சிறுமிகளும் பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் நேற்று மாலை 4.30 மணிக்கு அனுமதிக்கப்பட்டனர்.

சிறுவர் இல்லத்தின் பெண்கள் பிரிவில் தினமும் இரவு வேளை தங்குபவர் எனக் கூறப்படும் ஆண் பணியாளர் ஒருவர் சிறுமியரோடு முறைகேடான விதத்தில் உறவு வைத்திருந்தார் என்று பொலீஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப விடுதிப் பணியாளர் தன்னுடன் பாலியல் வல்லுறவு புரிய முயற்சித்தார் என்று அங்கு தங்கியிருந்த 15 வயதுச் சிறுமி ஒருத்தி பொலீஸாருக்கு வாக்குமூலம் அளித்திருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

சைவச் சிறுவர் இல்லத்தில் தங்கியிருக்கும் பெண் சிறார்களின் பாதுகாப்புத் தொடர்பாக ஏற்கனவே யாழ் நீதிவான் இ.த.விக்னராஜாவுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன என்றும் -

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நீதிவான்கள், பொலீஸ் அதிகாரிகளின் கூட்டத்தில் இந்த விடயத்தை அவர் பிரஸ்தாபித்தார் எனவும் தெரியவருகிறது.

யாழ். பொலீஸ் அத்தியட்சகர் ஹெட்டர் தர்மசிறிக்கு இது பற்றி தெரிவிக்கப்பட்டதையடுத்து சிறுவர் இல்லத்தில் பொலீஸ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹரல் அன்ரனி, யாழ் பொலீஸ் அத்தியட்சகர் ஹெட்டர் தர்மசிறி ஆகியோரின் உத்தரவின் பிரகாரம் சாவகச்சேரி பொலஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி.ஜி.விமலசிறி குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரி எரிறோகித ஆகியோர் தலைமையில் சென்ற பொலீஸ் குழுவினர் சிறுவர் இல்லத்தை நள்ளிரவு வேளை முற்றுகையிட்டு சோதனை நடத்தி சிறுமிகளை மீட்டு அழைத்து வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பொலீஸ் குழுவில் பொலீஸ் சார்ஜன்ட் மெண்டிஸ், பொலீஸ் கான்ஸ்டபிள்களான ஏக்கநாயக்க, நவரத்தின, விநாயகமூர்த்தி, கமலஹேரத் ஆகியோரும் பெண் பொலிஸாரான நிலாந்தி, ரேணுகா ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர் என்று சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ-3-8-10-11)

# மரண அறிவித்தல்கள்

## தர்மலிங்கம் பரம்சோதி

(வயம்ப பல்கலைக்கழகம், மாகந்துற)

காரைநகர், ஆயிலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் பரம்சோதி நேற்று (12.04.2003) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் தர்மலிங்கம் - சறோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மகனும் சத்தியவாணி (பிரான்ஸ்), தனலட்சுமி (சமுர்த்தி உத்தியோகத்தர், காரை. மத்தி), சத்தியாம்பாள் (யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீடம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சீனிவாசன் (பிரான்ஸ்) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.04.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

ஆயிலி,
காரைநகர். (16762)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர், வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் (உடுப்பிட்டி செல்லப்பா)-வள்ளியம்மை நேற்று (12.04.2003) சனிக்கிழமை 92 வயதில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை, சரவணமுத்து, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜானகியம்மா (கனடா), ஞானாம்பிகை, கந்தசாமி (கனடா), சண்முகரட்ணம் (பத்திரிகைமுகவர் அச்சுவேலி), பரமேஸ்வரன் (மகாலட்சுமி ஸ்ரோர்ஸ், ஸ்ரான்லி வீதி), சண்முகதாசன் (கனடா), நவனீதமணி (Srilanka Tele Com.) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, [illegible]கராசா மற்றும் சறோஜினிதேவி (கனடா), இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்), சொர்ணாம்பிகை, தனலட்சுமி (கனடா), அமரர் இரட்ணானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் புஸ்பராணி, கணேசமூர்த்தி, லிங்கேஸ்வரி, சாந்தா, வசந்தி, ஜெயந்தி, பாலச்சந்திரன், தேவகி, சுபத்திரா, சயந்தன், நாதசொரூபன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), பாலமுருகன், நாகலோஜினி (சுன்னாகம் பிரதேச சபை) சசிகலா, மினோஜினி, பிரசாந்தி, லோஜினி, அருட்குகன் (கொழும்பு), இந்துஜா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பேரானந்தரூபன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் சாளினி, கீதாஞ்சலி, தர்மதா, தனா, சுரேஸ், டினேஸ், கௌசிகன், வைஷ்ணவி ஆகியோரின் அருமை பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (சி-27405)

தகவல்:
சண்முகரட்ணம் (மகன்),
பரமேஸ்வரன் (மகன்),
திருமதி நவனீதமணி (மகள்).

## திருமதி கந்தையா தங்கரத்தினம்

தாவடி வடக்கைச் சேர்ந்த திருமதி கந்தையா தங்கரத்தினம் நேற்று (12.04.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், சிவபாக்கியம், கமலேஸ்வரி, நடராஜா, பாலசுப்பிரமணியம், தேவராஜா, சத்தியபாமா, கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராசநாயகம், திருஞானசம்பந்தர், மகேஸ்வரி, தங்கலட்சுமி, ஆனந்தரஜனி, காலஞ்சென்ற கனகசிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பரராஜசேகரம், சந்திரசேகரம், ஞானசேகரம், காலஞ்சென்ற குணசேகரம், இராஜசேகரம், ரஞ்சனா, காலஞ்சென்ற ஈஸ்வரி, கமலவதனி, மைதிலி, மாருதி, மாலதி, குமரதாஸ், கெசந்திலி, கெசந்தன், ரமேஷ்கண்ணா, ராஜேஸ்கண்ணா, சுரேஷ்கண்ணா, சுமன்ராஜ், நாட்டியா, சீனா, சுதன்ராஜ், சுந்தரேஷ், சுதர்சினி, சுகிர்தன், தீபராஜினி, சுஜீபன், ரஜீபன், கஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.00 மணியளவில் தாவடியில் உள்ள கஜன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கஜன் இல்லம்,
தாவடி வடக்கு. (16763)

தகவல்:
க.பாலசுப்பிரமணியம் (மகன்).


ஈசன்
கல்வி நிலையம்
எமது வழமையான
ஆசிரியர் குழுவுடன்
ஆரம்பமாகிவிட்டது
A/L 2005
கலை, வர்த்தக
கணித உயிரியல்
பிரிவுகள் (16738)

SUBRA (14)
சித்தங்கேணி
நாளை ஆரம்பம்
O/L Day Class
காலை 10.00
குறிப்பு:-
O/L ஆங்கிலம் சித்தி பெற தவறிய மாணவர்களுக்கு விசேட ஆங்கில வகுப்பு
Sat, Sun : 6-7.30
அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை.
(C-27226)

இணைந்த கணிதம்
G.C.E. A/L 2003
வழிகாட்டல் கருத்தரங்கு
வழங்குபவர்
Dr.S.ஶ்ரீசற்குணராஜா
(யாழ்.பல்கலைக்கழகம்)
இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
(யா/நல்.இ.த.பெ.பாடசாலை)
காலம்:-
14.04.2003 (Mon) 3p.m.
அறிவொளி - Nallur
(16761)

LIONAIR
LANKA'S PRIDE IN THE SKY
யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்
பாதுகாப்பான – சௌகரியமான பயணம்
★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
பதிவுகளுக்கு :
லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777-733992
(C/27281)

நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை
A/L 2005
கலைப்பிரிவு,
வர்த்தகப்பிரிவு.
ECO. - ஜெயக்குமார்
TAM. -
HIC. -
HIN. - } கமலநாதன்
GEO. - நித்தி
HIS. - சுஜீகரன்
DRA. - இளங்கோ
CHR. - எடிசன்
LOG. - சத்தி
ACC. - முகுந்தன்
B.St. - உமாகாந்த்
ENG. - நிஷாந்தன்
ஆரம்பம் :— 14.04.2003
திங்கள் - 2.30 p.m.
(16739)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

| | | | |
|---|---|---|---|
| கு. ▲ | புதன் | சனி ராகு | |
| வெ. | இராசிச் சக்கரம் | | வியா. |
| செ. | | | சந். |
| | கேது | | |

# இந்த வார இராசி பலன்

## 13-04-2003 - 19-04-2003

### மாற்றம்

புதிய புத்தாண்டு - சுபானு வருஷம் சித்திரை மாதம் முதலாம் திகதி (14-04-2003இல்) காலை 9.52 இல் (பழைய நேரடிப் படி வாக்கியப்படி) புதிய வருஷம் பிறக்கும்.

13-04-2003 இல் - மகம் நட்ஷத்திரம் - சிங்கம் இராசியில் சந்திரன் நிற்கும். 17-04-2003 இல் மீனம் இராசியில் வெள்ளி மாறும்.

தெற்கில் அடிக்கடி பதற்றநிலை, அரசியல் வாதிகளிடையே மாறுபட்ட கருத்துக்கள் தோன்றும். இந்தியாவில் வடக்கில் நெருக்கடி, தெற்கில் அரசியல்வாதிகள் மாறுபட்ட கருத்துக்களை வெளியிடுவர். மத்திய கிழக்கில், ஈராக்கில் நெருக்கடிகள் தோன்றும். கூட்டணிப் படைகளுக்கு பெரும் இழப்புக்கள் ஏற்படும். வன்முறைகள் அதிகரிக்கும். இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் அமுக்கத்தால் திடீர் மழையும், சில நாடுகளில் உஷ்ணத்தால் புதுப்புது வியாதிகளும் தோன்றும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

நான் சொல்லிய படிதான் நீ நடக்க வேண்டும் என்கின்றது அமெரிக்கா ஈராக்கிடம். நீ எதற்காக படையெடுத்து எனது செல்வத்தை அழித்தாய் என்கின்றது ஈராக். அதர்மமா? விதியா?. உதயத்தில் புதன் உற்றவர்கள் தொடர்புகொள்ளச் செய்யும். மற்றவர்களை மகிழ்விக்க உதவிகள் செய்வீர்கள். வீடுமனைச் சிறப்பு வரும். பொருள் வரவு அதிகரித்தாலும் செலவும் கட்டுமீறும். தொழில் ஸ்தானத்தில் பொருள் வரவு அதிகரிக்கும். மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். நாரிநோ, மலச்சிக்கல் வரும். பிரயாணத்துறை, சந்தைத்துறையினர்களுக்கு நன்மைகள் கிடைக்கும். சனீஸ்வரன் தாக்கம் உண்டு. காய்ச்சல், துன்பங்கள் வரும் கவனமாக இருக்கவும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வியாழன், வெள்ளி.*

### இடபம்

